# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

சகோ. காலேப் யோசுவா
11/ 29, திருமால் நகர் விரிவாக்கம் II
போன்: 26490183
8வது குறுக்கு தெரு, பூந்தமல்லி, சென்னை - 600 056.

# உங்கள் கவனத்திற்கு, சிந்தனைக்கு மற்றும் தியானத்திற்கு சில தலைப்புகள்

1. தேவனுடைய தயவுள்ள சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைவதற்காக கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய நான், பிதாவாகிய தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது:
நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. உத்தம இருதயத்தோடும், சுத்தமான கைகளோடும் இந்த செய்தித்தொகுப்பை கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் பக்திவிருத்திக்காக எழுதுகிறேன்.

## I. சென்னை, பல்லாவரம், கல்வாரி ஜெபவீட்டில் கொடுமைகளை புசிக்கும் துரோகிகளின் துரோகம் குறித்து ஒரு பாரபட்சமற்ற ரிப்போர்ட்

2. கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமான என் சகோதரர்களே, சென்னை, பல்லாவரம், கல்வாரி ஜெபவீட்டின் பாஸ்டராக சகோ.ஐசக் அருமைநாயகம் இருந்து வந்தார். இவர் பாஸ்டர் பால் சங்கரன் சபையில் மூப்பராக இருந்த காலத்திலிருந்தே இவரை நான் நன்கு அறிவேன். இவர் கல்வாரி ஜெபவீடு என்ற பெயரில் சபை ஆரம்பித்து கடந்த சுமார் 12 ஆண்டுகளாக பாஸ்டர் பணி செய்து வந்தார்.

3. சமீப நாட்களில், கடந்த 2005 அக்டோபர் மாதம் இவர் ஒரு சாலை விபத்துக்குள்ளானார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதனிமித்தமாக சபையில் உள்ள ஒரு சிலரால், அதே சபையில் போதகராகயிருந்த சகோ.பெர்னார்ட் சாலொமோன் தற்காலிக பாஸ்டராக நியமிக்கப்பட்டார். இந்த நியமனம் சபையின் ஒப்புதல் எதுவும் பெறவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக இந்த நியமனம் தேவனுடைய வார்த்தையின்படி, இக்காலத்துக்குரிய செய்தியின்படி முற்றிலும் தவறான ஒன்றாகும். ஐந்துவகை ஊழியத்தில் ஒரு போதகனாக (Teacher) உள்ள ஒருவர், அந்த ஊழியத்திலுள்ள ஒரு மேய்ப்பனுடைய (Pastor) பணியை செய்ய முடியாது. ஏனென்றால் மேய்ப்பனுடைய ஸ்தானத்தைவிட போதகனுடைய ஸ்தானம் தாழ்ந்தது. தாழ்ந்த ஸ்தானத்திலுள்ள ஒருவர் தனக்கு மேல் உள்ள ஒரு ஸ்தானத்தை தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ வகிக்க முடியாது. ஒரு சுவிசேஷகன் ஒரு பாஸ்டருடைய பணியை நிரந்தரமாக அல்ல, மாறாக தற்காலிகமாக செய்யலாம். ஏனென்றால் ஐந்துவகை ஊழியத்தில் ஒரு சுவிசேஷகனுடைய ஊழியம் ஒரு பாஸ்டருடைய ஊழியத்தைவிட உயர்ந்த ஸ்தானம். ஆக உயர்ந்த ஸ்தானத்திலுள்ள ஒருவர் தாழ்ந்த ஸ்தானத்திலுள்ள ஒரு பதவியை தற்காலிகமாக கவனித்து வரலாம். இந்த அடிப்படையில் அந்த ஒரு சிலரால் இந்த போதகர் பாஸ்டராக நியமிக்கப்பட்டது முற்றிலும் தவறு. இந்த நியமனம் மனுஷ ஞானம் கொண்டதாகும்.

4. அடுத்து இந்த சகோதரனை கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைய ஒரு போதகனாக ஏற்படுத்தினார் எனவும் கூறமுடியாது. ஏனென்றால் இவர் உலகளாவிய கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய செய்வதற்கான பணிகள் எதையும் தன் வாழ்நாட்களில் இதுவரை செய்ததில்லை. போதகர் என்ற ஒரு கௌரவ பட்டத்தை வைத்துக்கொண்டு, கல்வாரி ஜெபவீட்டிற்கு ஒரு விசுவாசியாக வந்து சென்று கொண்டிருக்கிறார், அவ்வளவு தான் இவருடைய காரியம். ஆக கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் உள்ள ஒரு போதகனுடைய பணிக்கும், இவருக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. இவரை போதகனாக அழைத்து கௌரவப்படுத்தியது அந்நாட்களில் பாஸ்டர் பால் சங்கரன் என்று நினைக்கிறேன். அதை தொடர்ந்து பாஸ்டர் பால் சங்கரன் செய்த தவறை மீண்டும் பாஸ்டர் ஐசக் அருமைநாயகம் செய்து வந்தார். இன்று பாஸ்டர் ஐசக் அருமைநாயகம் தன் தவறை உணருவார் என்று கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.

5. அடுத்து பாஸ்டர் ஐசக் அருமைநாயகத்துக்கு தன் சபையிலுள்ள ஒவ்வொரு ஆண்களுக்கும் ஒவ்வொரு பதவியை கொடுத்து பெருமைபட்டுக்கொள்வது மிக்க மனமகிழ்ச்சியாக இருந்தது. ஆக கல்வாரி ஜெபவீட்டில் பாஸ்டர் ஒருவர், மற்றப்படி ஆண்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பதவியை கொடுத்து அங்கு சுவிசேஷகர்களுக்கு பஞ்சம் இல்லை, போதகர்களுக்கு குறைவு இல்லை, மூப்பர்களுக்கு பற்றாக்குறை இல்லை, டீக்கன்களுக்கு வறுமை இல்லை. விசுவாசிகளுக்கு மட்டும்தான் பற்றாக்குறை, பஞ்சம் என்ற நிலையில் சபை இயங்கிக்கொண்டிருந்தது.

6. ஐந்துவகை ஊழியத்திலுள்ள ஒரு போதகனுக்கு மேல், ஒரு பாஸ்டருக்கு மேல் உள்ள சுவிசேஷகர்களுக்கு இந்த சபையில் பஞ்சமே இல்லை. ஒன்றா, இரண்டா, மூன்றா? மொத்தம் நான்கு பேர்கள். ஆக இந்த நான்கு சுவிசேஷகர்களில் ஒருவருக்காவது பாஸ்டர் பதவியை தற்காலிகமாக செய்ய தகுதி இல்லாமற் போயிற்று. பாஸ்டர் பதவியை தற்காலிகமாக வகிக்க யாருக்கும் அவர்களது மனசாட்சி இடம் கொடுக்காமல் போயிற்று. அவர்கள் சுவிசேஷகர்கள் என்று வெளிப்புறமாக அழைக்கப்பட்டாலும், அவர்களது மனசாட்சி அவர்கள் சுவிசேஷகர்கள் என்பதற்கு இடம் கொடுக்கவில்லை. ஆக இவர்களில் ஒருவருக்கு கூட தற்காலிகமாக பாஸ்டர் பணியை செய்ய ஆவியின் வழிநடத்துதல் இல்லாமல் போய்விட்டது. ஏன்? இவர்களில் ஒருவராவது தேவனால் ஏற்படுத்தப்பட்ட சுவிசேஷகன் அல்ல. ஒவ்வொருவரும் தங்களை தாங்களே சுவிசேஷகர்களாக அழைத்துக்கொண்டனர், அல்லது பிறரால் அழைக்கப்பட்டனர். அதுதான் காரியம். இதில் பாஸ்டர் ஐசக் அருமைநாயகத்துக்கு பெருமை. ஓ! பாருங்கள், என் சபையில் நான்கு சுவிசேஷகர்கள், போதகர்கள், மூப்பர்கள், டீக்கன்கள் உள்ளனர், என் சபை ஆவிக்குரிய ரீதியில் ஆசீர்வதிக்கப்பட்ட சபை. இப்பொழுது கல்வாரி ஜெபவீடு எந்த வகையில் ஆசீர்வதிக்கப்பட்ட சபையாக இருந்தது என்பதை நன்கு ஆவியில் உணர்த்தப்பட்டிருப்பார் என நினைக்கிறேன். சபைக்குள் போட்டி, பொறாமை, வஞ்சகம், சூது, துரோகம்

**இது தான் இருந்தது. அது இந்நாட்களில் வெடித்தது. பலூனை ஊதிக்கொண்டே சென்றால் என்ன ஆகும்? அது தான் நடந்தது.**

7. கல்வாரி ஜெபவீட்டில் எந்த ஒரு சுவிசேஷகனுடைய, போதகனுடைய, மூப்பருடைய, டீக்கனுடைய அழைப்பு, அழைப்பின் பணி, வாழ்க்கை கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு பாத்திரமாக இருக்கிறது? ஒருவருடைய வாழ்க்கையிலும் இல்லை. நீங்கள் இருக்கிறது என்று கூறினால், வாருங்கள், என் அன்பு சகோதரர்களே நீங்கள் வேதவாக்கியங்களை கொண்டு அதை நிருபித்து காட்டவாருங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் உங்களை சுவிசேஷகர், போதகர், மூப்பர், டீக்கன் என அழைத்துக்கொண்டு அதில் பெருமைப்பட்டுக்கொண்டிருக்கிறீர்களே தவிர மற்றப்படி எதுவும் இல்லை. கல்வாரி ஜெபவீட்டில் மட்டும்தானா இந்த நிலை? உங்கள் மத்தியில் உள்ள அனைத்து சபைகளின் நிலையும் இதுவே. நீங்கள் மனந்திரும்பாமல் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்.

8. ஆக கல்வாரி ஜெபவீட்டில் சுவிசேஷகர்களாக, போதகர்களாக, மூப்பர்களாக, டீக்கன்களாக இருந்தவர்களுக்கும், அவர்களுடைய நியமத்துக்கும் தேவனுக்கும், எந்தவிதமான சம்மந்தமும் இல்லை. தேவனால் நியமிக்கப்பட்டிருப்பார்களாகில் நம்முடைய தேவன் சமாதானத்தின் தேவன், குழப்பத்தின் தேவன் இல்லை, கல்வாரி ஜெபவீட்டிற்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது, இப்படிப்பட்ட நிலை வேறு எந்த ஒரு சபைக்கும் ஏற்படக்கூடாது என்பதே என் பிரார்த்தனை.

9. இப்பொழுது பாஸ்டர் ஐசக் அருமைநாயகம் தனக்கு ஏற்பட்ட விபத்தால் சபை கூடுதலில் பங்கு கொள்ள முடியாமல் போய்விட்டது. ஓரளவு சரீரத்தில் ஆரோக்கியம் பெற்றவுடன் சபை கூடுதலுக்கு வந்து பங்கு கொள்ள ஆரம்பித்தார். ஆனால் அவர் தன் பணியை செய்யும் அளவுக்கு பூரண சுகம் பெறவில்லை. 2005, டிசம்பர் மாதத்தில் தன் பணியை ஏற்றுக்கொள்ள ஆயத்தமானார். ஆனால் கொடுமைகளை புசிக்கும் துரோகிகள் கூட்டம் இவர், தனது பணியை செய்ய அனுமதிக்கவில்லை. **சாத்தான் எப்பொழுதுமே எது சரியானதோ அதற்கு எதிர்த்து போராடுகிறவனாயிருக்கிறான்.** மாறாக மேய்ப்பனுடைய விபத்தின் நிமித்தமாக, சுகவீனமாக இருந்த பாஸ்டருக்காக, அவர் பணியை தற்காலிகமாக செய்ய, ஒரு சிலரால் ஏற்படுத்தப்பட்ட போதகனையே தொடர்ந்து பாஸ்டர் பணியை செய்துகொண்டிருக்க உற்சாகப்படுத்தினார்கள். 12 ஆண்டுகளாக பாஸ்டர் பணியை செய்து கொண்டிருந்த சகோ.ஐசக் அருமைநாயகத்தை ஒரு விசுவாசியை விட கீழ்த்தரமாக சபையில் நடத்தினார்கள். அவரை எல்லாவற்றிலும் உதாசீனப்படுத்தினார்கள். சபை கூடுதல் வேளையில் ஒரு ஜெபம் கூட அவருக்கு கொடுக்கப்படவில்லை. துரோகிகளின் கூட்டம் அவரை ஏறிட்டு பார்க்கக்கூட பிறரை அனுமதிக்கவில்லை. இவ்வாறாக சபையில் அவர் முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்டார். அதாவது சபை கூடுதல் வேளையில் சபையின் உள்ளே அவரை அனுமதித்து, அவரை உயிரோடே சித்திரவதை செய்தனர் அந்த அரக்கர்கள். துரோகிகளின் துரோகம் நாளுக்கு நாள் பனை மரம் போன்று வளர்ந்து கொண்டே சென்றது.

10. தற்காலிகமாக பாஸ்டர் பணியை செய்து வந்த, முற்றிலுமாக ஊழியத்திற்கு தகுதியற்ற போதகனின் உறவினர்கள் அந்த சபையில் பலர் இருந்ததால், அவர்கள் இனி அந்த போதகனையே பாஸ்டராக வைத்துக்கொண்டு தங்கள் காரியங்களை சமாளிக்க நினைத்ததே அந்த துரோகத்திற்கு காரணம். சபைக்கு சுமார் 7 முதல் 8 ஆயிரங்கள் தசமபாகம் வருகிறது. பாலை குடித்துக்கண்ட பூனை சும்மாயிருக்குமா? இதனால் தற்காலிக பாஸ்டர், நிரந்தர பாஸ்டராக அந்த பதவியில் தன்னை பெவிக்கால் போட்டு ஒட்டிக்கொண்டார். ஏழு முதல் 8 ஆயிரங்கள் தசமபாகம் வரும் சபையில் பாஸ்டர் பதவிக்கு இத்தனை ஆசை இருக்குமானால், பிரதிமாதம் 20 முதல் 60 ஆயிரங்கள் தசமபாகம் வரும் வலசரவாக்கம் கல்வாரி சபை, பெரவலூர் சென்னை சபையில் பாஸ்டர் பதவியில் ஒட்டிக்கொள்ள, சந்ததி இருக்குமானால் தனக்கு பின் தன் சந்ததியில் ஒருவரை நியமிக்க யாருக்குதான் ஆசை இருக்காது? இந்நாட்களில் பாஸ்டர் ஊழியமே பணம் சம்பாதிப்பதற்கு தானே? இது கௌரவமாக, ஊரை ஏமாற்றும் ஒரு ஊழியம் தானே. இது பகல் கொள்ளை அடிக்கும் கூட்டம் தானே? என் ஜனங்கள் மத்தியில் என்று தான் விழிப்புணர்ச்சி ஏற்படுமோ? என் மூலமாய் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்?

11. பாருங்கள், பண ஆசைதான் எல்லா தீமைக்கும் வேராக இருக்கிறது. ஆக தற்காலிக பாஸ்டரின் உறவினர்கள், நண்பர்கள், முதலாளி தங்கள் சுயலாபத்திற்காக, தங்கள் தங்கள் காரியங்களை சுலபமாக சமாளிக்க பாஸ்டர் ஐசக் அருமைநாயகத்துக்கு நேற்றுவரை சிநேகிதர்களாக இருந்து மாய்மாலம் பண்ணினவர்கள் இன்று துரோகிகளும், சத்துருக்களுமானார்கள். இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

12. தற்காலிக பாஸ்டர் பதவியில் இருந்தவர் ஒரு தேவனுடைய மனுஷனாக, யோக்கியமானவராக இருந்திருப்பாராகில், சுகம் பெற்று பாஸ்டர் ஐசக் அருமைநாயகம் சபைக்கு வந்தவுடன், தன் பதவியிலிருந்து கீழே இறங்கி, மரியாதையாக தன் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்திருக்கவேண்டும். இந்த விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரன் மாய்மாலம்பண்ண ஆரம்பித்தார். இந்த மாய்மாலத்தை சகோ.சார்லஸ் ஜோசுவா ராஜ்குமார் முடிவுக்கு கொண்டுவர பிரயாசப்பட்டார். துரோகிகள் கூடினார்கள். அவர்கள் முடிவும் ஒரு துரோகம் தான். சபை இன்று நடப்பது போன்று மேலும் சில காலம் நீடித்துக் கொண்டு செல்லட்டும் என முடிவு எடுத்தனர். இவ்வாறாக துரோகத்திற்கு சபையில் ஒரு மனம் காணப்பட்டது. இதன் பின் பாஸ்டர் ஐசக் அருமைநாயகத்துக்கு அங்கு என்ன வேலை? அவர் அங்கு மேலும் நீடித்திருந்தால் ஒரு மனநோயாளியாக மாறியிருப்பார். கர்த்தர் தம்முடைய கிருபையினால் அதை தடுத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

13. ஆக ஆட்டுத்தோலை போர்த்தியவர்களுக்கு இதுவரை மேய்ப்பனாக இருந்த சகோ. ஐசக் அருமைநாயகம் மந்தையிலுள்ள ஆடுகள் யார் என்பதை அறிந்தவுடன், தன்னை அதன் வாயிலிருந்து தப்புவித்துக்கொண்டார். 12 ஆண்டுகளாக தான் சபைக்கு செய்த தியாகம், சம்பாதித்த பொருட்கள் அனைத்தையும் இழந்து, தன்னை வெறுமையாக்கி வெளியே வந்து தன் ஜீவனை தப்புவித்துக்கொண்டார்.

14. முதலாவது கல்வாரி ஜெபவீடு தான் தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு மேய்ப்பன் என்று கூறுகிறவரை பதவியிலிருந்து நீக்கம் செய்ய முடியாது. தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு மேய்ப்பனை பதவி நீக்கம் செய்ய இந்த பூமியில் ஒருவனுக்கும் அதிகாரம் கொடுக்கப்படவில்லை, அதிகாரம் கிடையாது. ஏனென்றால் அவர்

தேவனால் நியமிக்கப்பட்டவர். கல்வாரி ஜெபவீட்டினால் பாஸ்டர் ஓட்டு மூலமாக நியமிக்கப்பட்டிருப்பாராகில், அந்த நபர் மீது சபையார் நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வந்து, குற்றச்சாட்டுக்களை வேதவாக்கியங்களை கொண்டு நிருபித்து, மெஜாரிட்டி ஓட்டு மூலம் அவரை நீக்கம் செய்யலாம். இங்கு பாஸ்டர் ஐசக் அருமைநாயகம் கல்வாரி ஜெபவீட்டினால் நியமிக்கப்பட்ட ஒரு மேய்ப்பன் அல்ல. ஆதலால் அவர் தனது பணியை செய்ய விடாதபடி தடுக்க, பதவி நீக்கம் செய்ய கல்வாரி ஜெபவீட்டிற்கு அதிகாரம் கிடையாது. சபையில் அவர் மீது அதிருப்தி கொண்டவர்கள் இருப்பார்களாகில், அவர்கள் தான் அவரை விட்டு விலகி விடவேண்டுமெயன்றி அவரை பதவி நீக்கம் செய்ய அந்த அதிருப்தி கோஷ்டிக்கு அதிகாரம் கிடையாது.

15. இரண்டாவதாக பாஸ்டர் ஐசக் அருமைநாயகம் தனக்கு ஏற்பட்ட விபத்தினால் காயப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, இரு மாதங்களில் பூரண சுகம் பெற்று, தனது பதவியை மீண்டும் பெற்றுக்கொள்ள வந்தார். ஆனால் அவரை தன் பணியை செய்யவிடாது, அவரை இழிவாக நடத்தி அவரை இழிவாக நடத்துவதன் மூலம் அவரே தானாகவே வெளியேறி சென்றுவிட நிர்பந்தப்படுத்தியது, அவரை சபைக்கு புறம்பே தள்ளியது சாத்தானுடைய செயலே, அது ஒரு அடாவடித்தனமே. அவர் மீது குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லை. குற்றச்சாட்டுகள் வேதவாக்கியங்களை கொண்டு நிருபிக்கப்படவுமில்லை. இந்நிலையில் அவரை தன் பணியை செய்யவிடாதபடி தடுத்தது துரோகிகளுடைய துரோகம் தான்.

16. மூன்றாவது பாஸ்டர் ஐசக் அருமைநாயகத்தின் மகள் வேலை செய்கிறாள். அது தவறு என்று ஒரு குற்றச்சாட்டை மறைமுகமாக கொண்டு வந்தது வேதவாக்கியங்களின் அடிப்படையில் இல்லை. இந்த பெண் இன்னும் திருமணம் ஆகாதவள். அவள் எந்த சரீரத்தின் ஒரு பாகமா இருக்கிறாளோ அதை இன்னும் அவள் கண்டடையவில்லை. தீத்து.2:4 மற்றும் 5 வசனங்கள் திருமணமான பாலிய ஸ்திரீகளுக்கு பொருந்தும். திருமணம் ஆகாத அந்த பெண்ணை குறித்து குற்றம் சாட்டும் உங்கள் இல்லத்தில் உங்கள் மனைவி பொது ஸ்தலங்களில் சென்று பணிபுரிந்து வருவது உங்களுக்கே வெட்கமாக தோன்றவில்லையா? உங்களுக்கு கொஞ்சமாவது மனச்சாட்சி என்பது கிடையாதா? உங்களை நீங்களே சீர்தூக்கிப்பாருங்கள். முதலாவது உங்கள் கண்களில் இருக்கும் உத்திரத்தை நீக்கிப்போடுங்கள். பின் அவள் கண்களில் இருக்கும் உத்திரத்தை நோக்குங்கள். பாஸ்டர் ஐசக் அருமைநாயகத்தின் மகள் ஒரு இளம் பெண். இந்நிலையில் அவள் ஒரு பொதுஸ்தலங்களில் பணி செய்வது அவளுடைய சுயவிருப்பு, வெறுப்பு. அவள் தகப்பனின் குடும்பநிலையை பொறுத்தது. அதில் யாரும் தலையிடமுடியாது. அவளை தடுக்கவும் முடியாது. ஒருவர் தன் இளம் வயது மகளை வேலைக்கு அனுப்பாமல் இருக்கலாம். அது நல்லது. ஆனால் அது அவருடைய சுயவிருப்பம். ஒருவர் தன் சுயவிருப்பத்தை மற்றொருவர் மீது திணிக்கமுடியாது. என்னை பொறுத்தளவில் வாலிப பெண்கள் திருமணமாகாத நிலையிலிருந்தாலும்கூட இக்கொடிதான காலத்தில் பணிக்கு சென்றுவருவது பாதுகாப்பு அல்ல. ஆரோக்கியமானதுமல்ல. ஆனால் சூழ்நிலைகள் அவளை பணிசெய்ய நிர்பந்தப்படுத்தலாம். ஆனாலும் அதை தவிர்ப்பது நல்லது. இது என் நிலை. இதை நான் சபை மீது திணிக்க முடியாது.

17. நான்காவதாக அந்த பெண் இரவு வேளையில் தன் பணிக்கு சென்று வருகிறாள். இந்த குற்றச்சாட்டையும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் இதை நிருபிக்க வேதவாக்கியங்களிலிருந்து, இக்காலத்துக்குரிய செய்தியிலிருந்து ஆதாரங்கள் கொடுக்கமுடியாது. அவள் பணிபுரிவது இரவோ அல்லது பகலோ அவள் தன் பணி புரியும் இடத்தில், தன்னோடு பணிபுரிவோர்கள் மத்தியில் தன் கற்பை காத்துக்கொண்டு, ஒரு கற்புள்ள கிறிஸ்தவ பெண்ணாக தன்னை காத்துக்கொண்டால் அது போதும். இரவோ, பகலோ அதில் வித்தியாசம் எதுவும் இல்லை. ஆனால் பெண்கள் இரவு நேரத்தில் வேலை செய்வது, பகல் நேரத்தில் ஓய்வு எடுப்பது ஒரு ஆரோக்கியமான, நலமான செயல் கிடையாது. இது என் கருத்து. ஆனால் பணிபுரிகிற திருமணமாகாதவர்களை தடுக்க ஆதாரங்கள் எதுவும் கிடையாது. இது அவர்களுடைய சுயவிருப்பு, வெறுப்பு.

18. ஐந்தாவதாக அந்த பெண் சுடிதார் ஆடை அணிகிறாள் என்ற குற்றச்சாட்டு. வேதவாக்கியம் பெண்கள் ஆடை, ஆண்கள் ஆடை குறித்து என்ன கூறுகிறது? புருஷரின் உடைகளை ஸ்திரீகள் தரிக்கலாகாது. ஸ்திரீ உடைகளை, புருஷர்கள் தரிக்கலாகாது. அப்படி செய்கிறவர்கள் எல்லாரும் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவர்கள். உபா.22:5 உலகில் பல நாடுகள் உண்டு. ஒவ்வொரு நாட்டு மக்களின் ஆடைகள் வித்தியாசப்பட்டது. நமது நாட்டு பெண்கள் அணியும் ஆடைகளில் பலவகைகள் உண்டு. அதில் சுடிதார் ஆடை ஒன்று. பெண்கள் மட்டுமே இவ்வித ஆடைகளை அணிகிறார்கள். பள்ளிகளில் கூட மாணவிகளை சுடிதார் ஆடை அணிய கட்டாயப்படுத்துகிறார்கள். ஆனாலும் அதற்கு ஆதரவு, எதிர்ப்பு உண்டு. அடுத்து இந்த சுடிதார் ஆடைகளை ஆண்கள் அணிவது இல்லை. இந்த ஆடைகளை நமது ஆண்கள் அணிவார்களானால் நாம் நமது பெண்களை நோக்கி ஆண்களுடைய ஆடைகளை நீங்கள் அணிவது என்ன என கேட்கலாம். நமது பெண்கள் அணியும் சுடிதார் ஆடைகளை நமது ஆண்கள் அணியாத போது நமது பெண்களை எப்படி அவர்கள் சுடிதார் ஆடைகளை அணியக்கூடாது என தடை செய்யமுடியும்? கூடாதே.

19. இவ்வாறாக இந்த இளம் பெண் மீது இந்த மாய்மாலக்காரர்கள் மறைமுகமாக குற்றம்சாட்டி, ஒருவன் தன் சொந்த குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால் தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? (1தீமோ.3:5) என்கிறார்கள். ஆக பாஸ்டர் ஐசக் அருமைநாயகம் தன் குடும்பத்தை சரியாக நடத்தாததினால் அவர் பாஸ்டர் பதவிக்கு தகுதி இல்லை என்கிறார்கள்.

20. இப்பொழுது இந்த இளம் பெண் மீது தகாத குற்றச்சாட்டுக்களை கூறி தங்களை பரிசுத்தவான்களாக காட்டி நாடகம் நடத்தும் இந்த அக்கிரமக்காரர்களுடைய நடத்தையை சற்று ஆராய்வோம்.

21. இவர்கள் தங்களை பாஸ்டர், சுவிசேஷகர், போதகர் என அழைத்துக்கொள்ளுகிறார்கள். கிறிஸ்து தமது சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய தங்களை ஏற்படுத்தினார் எனக் கூறி பெருமைபாராட்டிக்கொள்ளுகிறார்கள். ஆனால் இவர்கள் இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்கிறார்கள். ஊதியம் பெறுகிறார்கள். இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது.. தேவனுக்கும் உலக பொருளுக்கும் ஊழியம் செய்ய உங்களால் கூடாது. மத்.6:4 அப்படியானால் இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்யும், இப்பிரபஞ்சத்தில் தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும், தன்னை சேவகம் எழுதிக்கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொண்டு (2தீமோ.2:4) தேவனும் தன்னை தம்முடைய சரீரமாகிய சபை

பக்திவிருத்தியடைய சுவிசேஷகனாக, பாஸ்டராக, போதகனாக ஏற்படுத்தினார் எனக் கூறி நாடகம் போடும் இவர்கள் யார்? மாய்மாலக்காரர்கள் தானே. தங்கள் அழைப்பை தேவனுடைய வார்த்தையை கொண்டு உறுதிப்படுத்த முடியாதவர்கள்.

22. இவர்கள் என்ன செய்கிறார்கள்? ஒரு வாரத்தில் ஆறு நாட்கள் இந்த பிரபஞ்சத்தில் தன்னை சேவகம் எழுதிக்கொண்டவனுக்கு ஊழியம் செய்கிறார்கள். ஊதியம் பெறுகிறார்கள். ஏழாவது நாள், ஞாயிறு கர்த்தர் என்னை பாஸ்டராக, சுவிசேஷகராக, போதகராக ஏற்படுத்தினார் என்று கூறிக்கொண்டு தங்கள் மனைவி மக்களுடன் அல்லது தனித்து தாங்கள் சார்ந்திருக்கும் சபைக்கு வந்து ஆராதனையில் கலந்து கொண்டு பின் வீடு திரும்புகிறார்கள். பாஸ்டர்கள் சபையில் தங்கள் சொந்த கோட்பாடுகளையே போதிக்கிறார்கள். ஜனங்களை கவர்ச்சிக்க என்னென்ன செய்யவேண்டுமோ அனைத்தையும் செய்கிறார்கள். ஆக முதல் பணியில் சம்பளம். இந்த இரண்டாவது பணியில் கர்த்தருக்குரிய தசமபாகத்தை கொள்ளையிடுகிறார்கள். சுவிசேஷகர்கள் என தங்களை அழைத்துக்கொள்ளுகிறவர்கள் வருடத்தில் ஓரிரு முறை எங்கேயாவது பொதுகூட்டங்கள் சிறிய அளவில் போட்டு கிறிஸ்துவை பிரசங்கிக்கிறார்கள். அல்லது மாதத்தில் ஏதாவது ஒரு ஞாயிறு ஏதாவது ஒரு லோக்கல் சபைக்கு சென்று தான் படித்த செய்தியை பிரசங்கம் பண்ணுகிறார்கள். மற்றப்படி வருடம் முழுவதும் தான் சார்ந்துள்ள சபைக்கு சென்று வருகை கொடுத்து வருகிறார்கள். இதுதான் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய தேவனால் ஏற்படுத்தப்பட்ட சுவிசேஷகனுடைய ஊழியமா? இது ஒரு பெரிய வெட்கக்கேடு. மேற்கூறிய சுவிசேஷ ஊழியத்திற்கும் தேவனுக்கும் எந்தவிதமான சம்மந்தமும் கிடையாது.

23. நம் மத்தியில் உண்மையாகவே ஒரு சுவிசேஷ ஊழியத்தை சென்னை சகோ.டேனியேல் ஆசீர்வாதம் செய்கிறார், நான் அறிந்த மட்டும். ஆனால் சகோதரனுடைய மனைவி பொது இடங்களில் பணி செய்து வருகிறார்கள். இதை ஏற்றுக்கொள்ள முடியாது. அது தேவனுடைய வார்த்தைக்கும் முரணானது. அதினால் தன் ஊழியத்தை கறைப்படுத்திக்கொண்டு வருகிறார். ஆக அவருடைய ஊழியமும் ஒரு கறைப்பட்டதே. முற்றிலுமாக தேவனுடைய வார்த்தைக்கு இசைவாக இல்லை.

24. கிறிஸ்துவின் சரீரம் விசுவாசிகளையும் அவிசுவாசிகளையும் கொண்டது அல்ல. அது விசுவாசிகளை மட்டும் கொண்டது. ஆதலால் ஐந்துவகை ஊழியம் பொது ஜனங்கள் மத்தியில் அல்ல. பொது கூட்டங்கள் போட்டு சுவிசேஷத்தை பிரசங்கிப்பது ஐந்துவகை ஊழியத்திலுள்ள ஒரு சுவிசேஷகனுடைய பணி அல்ல. அந்த பணிக்கு கர்த்தர் சகோ.டி.ஜி.எஸ். தினகரன், சகோ. மோகன் சி. லாசரஸ் போன்றவர்களை வைத்திருக்கிறார். ஐந்துவகை ஊழியத்தில் சுவிசேஷக ஊழியம் (இயேசு கிறிஸ்துவின் ஊழியம்) கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலுள்ள பரிசுத்தவான்கள் பூரணப்படும் பொருட்டும், சபை பக்திவிருத்தியடைவதற்காகவும் (ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியில் ஒவ்வொரு நிலையாக கூட்டி, கட்டி பக்திவிருத்தியடையச் செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஊழியம் ஆகும். அந்த சரீரம் பக்திவிருத்தியடைய ஏற்படுத்தப்பட்ட ஊழியக்காரன் தேவனுக்கென்று தன்னை முற்றிலுமாக சேவகம் எழுதிக்கொண்டவனாக இருப்பானேயன்றி, தேவனுக்கும் உலகத்துக்கும் ஊழியம் செய்து இரு இடங்களிலும் ஊதியம் பெறுபவனாக இருக்க முடியாது. அது வேதநியமத்திற்கு முற்றிலும் விரோதமானது.

25. பெண்களின் பணி குறித்து இக்காலத்துக்குரிய செய்தி கீழ்க்கண்டவாறு கூறுகிறது:

அ) **மிகுந்த அசைவூட்டும் ஒரு எழுப்புதல் இந்த பெண்களை பொதுஜன வேலைகளிலிருந்தும், தெருவில் நடக்கும் காவல்காரர் வேலையிலிருந்தும் எடுத்துப்போடும் என்று நினைக்கிறீர்களா? அவள் சமையல் அறையில் இருக்கவேண்டியவள். நீங்கள் மறுபடியும் அவளை அந்த இடத்திற்கு கொண்டுவர முடியும் என்று நினைக்கிறீர்களா? இல்லை ஐயா! அவள் இரட்சிக்கப்பட்டாலொழிய அப்படி செய்யமாட்டாள். அவள் இரட்சிக்கப்பட்டால், அப்படி செய்வாள். அப்பொழுது நீங்கள் அவளிடம் இதை குறித்து சொல்லவேண்டிய அவசியமே இருக்காது. அவள் தன் இடத்தை அறிந்து கொள்வாள். பரிசுத்த ஆவியானவர் என்னை வழிநடத்துகிறார் என்று நீ கூறுகிறாயா? வார்த்தைக்கு முரணான ஒன்றுக்கா? அதை பரிசுத்த ஆவி என்று அழைக்காதே.** *(இன்னும் ஒரு விசை கர்த்தாவே.* பத்தி 114, நாள் 20-1-1963) பாருங்கள் நான் இக்காலத்துக்குரிய செய்தியில் உள்ளவள், நான் கிறிஸ்துவின் மணவாட்டி, நான் ஒரு பாஸ்டரின் மனைவி, நான் ஒரு சுவிசேஷகனின் மனைவி, ஒரு போதகனின் மனைவி என்று கூறிக்கொண்டு ஒரு பெண் பொதுஇடங்களுக்கு சென்று பணிபுரிந்து வந்து, தான் பரிசுத்த ஆவியை பெற்றுள்ளதாக கூறினால் அது தேவனுடைய வார்த்தைக்கு, இக்காலத்துக்குரிய செய்திக்கு முரணானது. ஆது தேவதூஷணம். அவள் பரிசுத்த ஆவியை பெறவேயில்லை. பாஸ்டருடைய, சுவிசேஷகருடைய, போதகனுடைய மனைவி பரிசுத்த ஆவியை பெறவில்லை என்றால், அவள் எந்த சரீரத்தின் ஒரு பாகமோ அந்த சரீரத்தின் நிலை என்ன? சரீரத்தின் ஒரு பாகம் பரிசுத்த ஆவியை பெறவில்லை என்றால் அந்த சரீரம் பரிசுத்த ஆவியை பெறவில்லை என்றே பொருள். ஆக **பொது இடங்களில் பணிசெய்யும் ஒரு பெண்ணை மனைவியாக ஒரு சுவிசேஷகன், ஒரு மேய்ப்பன், ஒரு போதகன் கொண்டிருப்பானாகில் அவனும் பரிசுத்த ஆவியை பெறவில்லை** என்றே பொருள்படும்.

ஆ) அடுத்து பாருங்கள், தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷர்களிடத்திலும் தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும்.. **வீட்டில் தரித்திருக்கிறவர்களும** .. புருஷனுக்கு கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி .. புத்திசொல்லு (தீத்து. 2:4,5) கர்த்தர் சபையை போஷித்து காப்பாற்றுகிறது போல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தை போஷித்து காப்பாற்றுகிறான். (எபே.5:29) ஆம் ***மனைவி வீட்டில் தரித்திருக்கிறவளாக இருக்கவேண்டும். புருஷன் தன் சரீரமாகிய மனைவியை போஷித்து காப்பாற்றுகிறவனாக இருக்கவேண்டும்.*** பாருங்கள், கிறிஸ்து தம்முடைய சரீரமாகிய சபையை போஷித்து காப்பாற்றுகிறார். அப்படியே கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒரு புருஷனும், கிறிஸ்துவை தரித்துக்கொண்ட எந்த ஒரு புருஷனும் தன் மனைவியை போஷித்து காப்பாற்றவேண்டும். தன் மனைவியை பொது ஜனங்கள் மத்தியில் வேலைக்கு அனுப்புகிறவன் ஒரு கிறிஸ்தவன் அல்ல. அப்படியானால் உங்கள் சுவிசேஷகர், பாஸ்டர் நிலை என்ன? நீங்களே நிதானித்து கொள்ளுங்கள்.

26. அடுத்து சபையில் பவுலை பற்றி பேசாதே, வில்லியம் மாரியன் பிரன்காமை பற்றி பேசாதே, அவர்களுடைய உபதேசங்கள் இந்நாட்களில் நமக்கு தேவையில்லை. இன்றைக்கு ஊழியக்காரர்களாகிய நாம், தேவன் நமக்கு கொடுத்த வெளிப்பாட்டை கொண்டு பேச, உபதேசிக்கவேண்டும் என்கிறார் கல்வாரி ஜெபவீட்டில்

ஒரு சுவிசேஷகர். இவருக்கு தான் சபையில் மதிப்பும் மரியாதையும் அதிகம். ஏன்? பணம் படைத்தவர் அல்லவா! நிச்சயமாக இவர்கள் எல்லாம் சுவிசேஷகர்கள் இல்லை. மாறாக சபையை, இக்காலத்துக்குரிய செய்தியை பாழாக்கும் **சாத்தானுடைய தூதர்கள்.**

27. தேசமே! தேசமே! தேசமே! கர்த்தருடைய வார்த்தையை கேள்; இந்த புருஷன் சந்தானமற்றவன், தன் நாட்களில் வாழ்வடையாதவன் என்று இவனை குறித்து எழுதுங்கள்.. என்று கர்த்தர் சொல்லுகிறார். (எரே.22:29,30) பிரியமானவர்களே, சந்தானமில்லாதவன், தன் இல்லறவாழ்க்கையில் குழந்தைபேறு இல்லாதவன். அவன் தன் நாட்களில் வாழ்வடையாதவன், கர்த்தர் அவனை வாழ்வடையவைக்கவில்லை. கர்த்தர் தான் வாழ்வடைய வைக்காத ஒருவனை தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய ஒரு ஊழியக்காரனாக ஏற்படுத்துவாரா? சிந்தியுங்கள், தியானியுங்கள்.

28. ***சந்தானமில்லாதவன் குறித்து வேதவாக்கியங்கள் நமக்கு கற்பிப்பது என்ன?***

அ) ஒருவன் தன் சகோதரனுடைய மனைவியோடே சயனித்தால், அவன் தன் தகப்பனின் சகோதரனை நிர்வாணமாக்குகிறான்; அவர்கள் தங்கள் பாவத்தை சுமப்பார்கள். சந்தானமில்லாமல் சாவார்கள்.

ஆ) ஒருவன் தன் சகோதரன் மனைவியை விவாகம்பண்ணினால், அது அசுத்தம்; தன் சகோதரனை நிர்வாணமாக்குகிறான்; அவர்கள் சந்தானமற்றிருப்பார்கள். லேவி.20:20,21.

29. ஒருவன் சந்தானமற்றிருப்பதற்கான காரணத்தை வேதவாக்கியங்கள் அடிப்படையில் கண்டீர்கள். தேவனால் கக்கிப்போடப்பட்டவர்களை கர்த்தர் எவ்வாறு தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய ஒரு ஊழியக்காரனாக ஏற்படுத்துவார்? தேவன் தம்முடைய வார்த்தையை காத்துக்கொள்ளுகிறவர். அவர் மாறாதவர்.

30. சகல ஜனங்களை பார்க்கிலும் நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்; உங்களுக்குள்ளும், உங்கள் மிருக ஜீவன்களுக்குள்ளும் ஆணாகிலும், பெண்ணாகிலும் மலடிருப்பதில்லை. உபா.7:14 தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவன் வீட்டில் மலடு இருப்பதில்லை. மலடு இருக்குமானால் அவன் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவன் இல்லை. தேவனால் ஆசீர்வதிக்கப்படாதவனை, கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய எப்படி ஒரு ஊழியக்காரனாக ஏற்படுத்துவார்?

31. இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன். சங்.127:4 கர்த்தருக்கு பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான். .. உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனி தரும் திராட்சை கொடியைப் போல் இருப்பாள்; உன் பிள்ளைகள் உன் பந்தியை சுற்றிலும் ஒலிவமரக்கன்றுகளைப் போல் இருப்பார்கள். இதோ கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான். சங்.128:1-4. மலடியை சந்தோஷமான பிள்ளைதாய்ச்சியாக்கி, வீட்டிலே குடியிருக்கப்பண்ணுகிறார். அல்லேலூயா! சங். 113:9. தேவனே, கர்ப்பங்களை அடைக்கிறார். தேவனே, கர்ப்பத்தை திறந்து பிள்ளை பெறும்படி அநுக்கிரகம் செய்கிறார். (ஆதி.20:18,19) பாருங்கள் தேவன் கர்ப்பத்தை அடைக்கிறார், திறக்கிறார். மலடியை பிள்ளைத்தாய்ச்சியாக்குகிறார். கர்த்தருக்கு பயப்படுகிற மனுஷன், மனைவி பிள்ளைகளோடு ஒரு குடும்பமாக ஆசீர்வதிக்கப்பட்டவன். தேவனால் ஒரு குடும்பத்தை கொடுத்து ஆசீர்வதிக்கப்படாதவனை, அவர் எப்படி தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய ஐந்து வகை ஊழியத்தில் ஒரு ஊழியக்காரனாக ஏற்படுத்துவார்? ஒருக்காலும் அப்படி செய்யமாட்டார். ஆதலால் ஒரு குடும்ப நிலையில், மனைவி பிள்ளைகளுடன் இல்லாதவன் தேவனுடைய ஊழியத்தை செய்ய தகுதியற்றவன் என்பதை உங்களுக்கு தேவனுடைய வார்த்தையை கொண்டு உணர்த்துவது எனக்கு நலமாக தோன்றிற்று.

32. அடுத்து நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயுமிருக்கிறீர்கள். கலா.3:29. ஒருவன் கிறிஸ்தவனாக, ஆபிரகாமின் சந்ததியாக இருப்பானாகில் அவனுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களுக்கு சுதந்தரனாயிருக்கிறான். ஆபிரகாமின் சந்ததி பலுகி பெருக ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததி. இந்த சந்ததியில் இருப்பவன் மனைவி, மக்களால் ஒரு ஆசீர்வதிக்கப்பட்டவனாக இருப்பான். புருஷன், மனைவி, மக்களை கொண்டது தான் ஒரு குடும்பம். இந்த குடும்பம் இல்லாதவன் தேவனுடைய ஊழியத்தை செய்ய முற்றிலும் தகுதியற்றவன். ஊழியக்காரனுக்கு ஒரு குடும்பம் அவசியம் என்பதை நீங்கள் 1 தீமோ.3:4-13 வசனங்களில் தியானிக்கலாம்.

33. கிறிஸ்துவுக்குள் எனக்கு அருமையானவர்களே, இதை யாருக்கும் எதிராக நான் எழுதவில்லை. சந்தானமில்லாதவன் குறித்து வேதவாக்கியங்கள் நமக்கு என்ன போதிக்கிறது என்பதை தேவனுடைய சபைக்கு எழுதுகிறேன். அதற்கான உக்கிராணத்தை நான் உடையவனாக இருக்கிறேன். இந்த போதனை யாரையாவது புண்படுத்துமானால் அதற்காக நான் வருந்துகிறேன். ஆனால் இந்த போதனை என் சுயமானது அல்ல, அது வேதவாக்கியங்களை ஆதாரமாக கொண்டது என்பதை மறந்துவிடாதீர்கள். வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை என்கிறார். லூக்.21:33. ஆதலால் இந்த போதனை குறித்து நீங்கள் வேறுவிதமாய் சிந்திக்கமாட்டீர்கள் என கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.

34. அடுத்து, இரட்சிக்கப்படாத மனைவியை உடைய ஒருவன் ஊழியக்காரனாக இருக்கமுடியாது. ஐந்து வகை ஊழியங்களில் எந்த ஒரு ஊழியத்தையும் அவன் வகிக்க தகுதியற்றவன். நீ ஒரு பாஸ்டராக, ஒரு சுவிசேஷகனாயிருப்பாயாகில் உன் மனைவி இரட்சிக்கப்பட்டிருக்கவேண்டும். அப்படியே ஒரு போதகனுடைய குடும்ப நிலையும். நீ இரட்சிக்கப்படாத மனைவியை கொண்டு, கர்த்தர் என்னை ஐந்துவகை ஊழியத்தில் ஒரு ஊழியத்திற்கு ஏற்படுத்தியுள்ளார் என்று கூறுவாயாகில் உன்னை நீயே வஞ்சித்துக்கொண்டிருக்கிறாய். மனைவி உன் சரீரத்தின் ஒரு பாகமாக இருப்பதால் அவள் கண்டிப்பாக இரட்சிக்கப்பட்டிருக்கவேண்டும்.

35. ஆக பாஸ்டர் ஐசக் அருமைநாயகத்தின் இளம்பெண் மேல் குற்றம் சுமத்தி அவர் குடும்பத்தை சரியாக நடத்த தெரியாதவர் எனக் கூறும் இவர்களுடைய காரியங்களை கவனித்தால் அவைகள் மகா கேடும் திருக்குள்ளதுமாயிருக்கிறது. இவர்கள் குடும்ப காரியமே தாறுமாறாக இருக்கும்போது, அவருடைய குடும்பத்தை குற்றப்படுத்த இவர்கள் யார்?

36. இந்நிலையில் 5-2-2006 அன்று பாஸ்டர் ஐசக் அருமைநாயகம் அவர்களும், அவருடைய குடும்பத்தினரும் மற்றும் சகோ.சார்லஸ் ஜோசுவா ராஜ்குமார் அவர்களும், நானுமாக 5 பேர்கள் பாஸ்டர் ஐசக் அருமைநாயகம் வீட்டில் கூடி ஜெபித்து அவருடைய இல்லத்திலே சபை கூடி வர பரிசுத்த ஆவியினால் வழி நடத்தப்பட்டோம். இவரது விலாசம் 29, மாரியம்மன் கோயில் தெரு (ஆதித்தனார் திருமண மண்டபம் அருகில்), ஈசா பல்லாவரம், சென்னை-600 043. இவரது போன் எண். 22642252. இது தேவனுடைய சபையாக சத்தியத்திற்கு தூணும் ஆதாரமாக இருக்குமென கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். நான் பாஸ்டர் ஐசக் அருமைநாயகத்தை சார்ந்திருப்பது, அவருக்காக அல்ல. மாறாக சத்தியத்திற்காக, தேவனுடைய வார்த்தைக்காக, மற்றும் இக்காலத்துக்குரிய செய்திக்காக மாத்திரமே.

37. இந்நாட்களில் சுவி. டேனியேல் ஆசீர்வாதம், பாஸ்டர் ஜே. ராயப்பன், பாஸ்டர் ஆமோஸ் பாஸ்கரன் போன்றவர்களை ஒரு திருமண வைபவத்தில் சந்திக்க நேர்ந்தது. மேற்கூறியவர்களில் முதல் இருவர்கள் கல்வாரி ஜெபவீட்டோடு மிக்க நெருக்கம் கொண்டவர்கள். கல்வாரி ஜெபவீட்டிற்கடுத்த காரியங்களை குறித்து இவர்களோடு பேசினேன். இவர்களும் கல்வாரி ஜெபவீடு நடவடிக்கைகள் தேவனுடைய வார்த்தைக்கு முரணானது என்று சாட்சிக்கொடுத்தார்கள். இது வரை நான் அறிய கல்வாரி ஜெபவீட்டின் அடாவடித்தனமான செயல்பாடுகளை யாரும் ஏற்றுக்கொண்டதாக தெரியவில்லை.

***38. காரியத்தின் கடைத்தொகையை கேட்போமாக:***

***அ) இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்து ஊதியம் பெறுகிறவன்.***

***ஆ) தன் மாம்சமாகிய தன் மனைவியை தன் உழைப்பால் போஷித்து காப்பாற்றாமல், தன் மாம்சமாகிய தன் மனைவியின் உழைப்பால் தன் குடும்பத்தை நடத்துகிறவன்.***

***இ) பரிசுத்த ஆவியை பெற்றவள் பொது ஜன ஸ்தலங்களில் பணிபுரிய மாட்டாள். ஒருவனுடைய மனைவி பொது ஜன ஸ்தலங்களில் வேலைசெய்தால் அவள் பரிசுத்த ஆவியை பெறவில்லை. அவள் பரிசுத்த ஆவியை பெறவில்லை என்றால், அவள் எந்த சரீரத்தின் ஒரு பாகமோ அந்த சரீரமும் பரிசுத்த ஆவியை பெறவில்லை. இந்த அடிப்படையில் பரிசுத்த ஆவியை பெறாத ஒருவன்.***

***ஈ) இரட்சிக்கப்படாத மனைவியை உடையவன். சரீரத்தின் ஒரு பாகம் இரட்சிக்கப்படவில்லை என்றால் அவன் பெற்றது இரட்சிப்பு இல்லை. அவன் இரட்சிக்கப்பட்டு அவனுடைய மனைவி இரட்சிக்கப்படவில்லையென்றால் அவள் மற்றொரு சரீரத்தின் பாகமாக இருக்கவேண்டும். அப்படியானால் மற்றொரு சரீரத்தின் பாகத்தை அவன் தன் சரீரத்துடன் ஒட்டவைத்துக்கொண்டான். ஆதலால் தான் அவள் இரட்சிக்கப்படவில்லை.***

***உ) குடும்பம் இல்லாதவன் (மனைவி மற்றும் பிள்ளைகள்)***

39. மேற்கூறிய நபர்கள் வேதவாக்கியங்களின் அடிப்படையில், இக்காலத்துக்குரிய செய்தியின் அடிப்படையில் கர்த்தருடைய பணியை செய்ய முற்றிலும் தகுதியற்றவர்கள். இவர்கள் கர்த்தரால் தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய ஐந்து வகை ஊழியங்களில் ஏற்படுத்தப்பட்டவர்கள் அல்ல. மாறாக தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கென ஒரு ஊழியம், தங்கள் சுயசித்தத்தின்படி செய்து வருகிறார்கள். தங்களை கிறிஸ்துவின் மணவாட்டி, மணவாட்டி என அழைத்துக்கொண்டு, கிறிஸ்துவின் மணவாட்டியாயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிற ஜனங்கள் தான் சாத்தானுடைய செய்தியாளனுக்கு செவிகொடுப்பார்கள். ஆதலால் சென்னை, பல்லாவரம், கல்வாரி ஜெபவீடு சாத்தானால் வழிநடத்தப்படுகிறது என்பதை வேதவாக்கியங்களை கொண்டு திருஷ்டாந்தப்படுத்துகிறேன்.

40. ***கல்வாரி ஜெபவீட்டின் இன்றைய நிலை மாறுமா?*** உங்களில் ஒருவனும் பிறனுக்கு அநியாயம் செய்யக்கூடாது; உன் தேவனுக்கு பயப்படவேண்டும்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். லேவி.25:17 இந்த சபையில் உள்ள அனைவரும் எனக்கு மிக்க நெருக்கமானவர்கள். அனைவரையும் நான் நன்கு அறிவேன். ஆனாலும் பிரச்சனைகள் வரும்போது நான் சத்தியத்தை சார்ந்து நிற்க வேண்டியவனாயிருக்கிறேன். பாஸ்டர் ஐசக் அருமைநாயகத்திற்கு துரோகம் செய்தவர்களை மனந்திரும்ப கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அழைக்கிறேன். இவர்கள் என் அழைப்பை உதாசீனப்படுத்தாது, தங்கள் தவறுகளை திருத்தி மனந்திரும்புவார்கள் மற்றும் பாஸ்டர் ஐசக் அருமைநாயகத்தோடு வந்து அவருடைய வீட்டில் கூடும் சபைகூடுதலில் பங்கு கொள்வார்கள் எனவும் கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். சகோதரர்களே, நான் உங்களை நேசிப்பதால் தான் உங்களை கடிந்து கொள்ளுகிறேன், உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன், உங்களை அழைக்கிறேன் என்பதை மறந்து விடாதீர்கள்.

41. முடிவாக, பாஸ்டர் ஐசக் அருமைநாயகம் வீட்டில் கூடும் சபை அநேக ஆத்துமாக்களை சத்தியத்துக்குள் வழி நடத்தும், அவர்களை எடுத்துக்கொள்ளப்படுதலுக்குரிய விசுவாசத்துக்குள் வழிநடத்தும், ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சிக்குள் வழிநடத்தும் என கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். சென்னையில் லட்சக்கணக்கில் ஹோட்டல்கள் உண்டு. ஆனால் நாம் சாப்பிடத்தக்க உணவு எந்த ஹோட்டலில் கிடைக்குமோ அதை தேடி சென்று அங்கு நம்முடைய உணவை உண்போம். அதே போன்று இக்காலத்துக்குரிய செய்தி எனக்கூறிக்கொண்டு மூலை முடுக்குகளில் சபைகள் ஏராளம் உண்டு. பல்லாவரம் பகுதிகளில் கூட இரு கைவிரல்கள் எண்ணிக்கைக்கு சபைகள் உண்டு. இது அவர்கள் எவ்வளவாக பிரிந்திருக்கிறார்கள் என்பதை காட்டுகிறது. இந்நிலையில் மீண்டும் ஒரு சபை உருவாகியுள்ளது. வளர்கின்ற ஒரு ஆவிக்குரிய மனுஷனுக்கு உண்ணத்தக்க உணவு மிக்க அவசியமாயுள்ளது. அந்த உணவு தேவனுடைய வார்த்தையில், இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறது. அந்த உணவு பாஸ்டர்களின் சுய உபதேசங்கள் அல்ல. நீங்கள் உண்ணத்தக்க உணவு பாஸ்டர் ஐசக் அருமைநாயகம் வீட்டில் கூடும் சபையில் கிடைக்குமென கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். இங்கு கலப்படமில்லாத போதனைகள் தேவனுடைய வார்த்தையிலிருந்து, இக்காலத்துக்குரிய செய்தியிலிருந்து கிடைக்குமென உறுதிகொண்டுள்ளேன். பாஸ்டர் ஐசக் அருமைநாயகம் இதில் உறுதியாக முடிவு வரை இருப்பார் என கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். இங்கு உணவில் கலப்படம் காணப்படுமாகில் நானே இவர்களிடமிருந்து என்னை வேறுபிரித்துக் கொள்ளுவேன். நான் ஒருக்காலும் கலப்படத்தோடு இணைந்து போகமாட்டேன். ஆதலால் எனக்கு பிரியமானவர்களே, நீங்கள் எங்களோடு வந்து ஐக்கியம் கொள்ளுங்கள் என உங்களை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அழைக்கிறேன்.

42. முதல் முதலாக சபை 12-2-2006 அன்று காலை 10.00 மணிக்கு கூடியது. ஆராதனை நேரம் காலை 10.00 மணிமுதல் மதியம் 1.00 மணிவரை. இதில் 13 பேர் வந்து கலந்து கொண்டார்கள். பாஸ்டர்

முன்னிலையில், சகோ.சார்லஸ் ஜோசுவா ராஜ்குமார் பாடல் பகுதிகளை நடத்தினார். நான் சபையின் முதல் செய்தியை கொடுத்தேன். கோவை ராஜாவின் சபைக்காலங்களில் 1963-ல் தலைக்கல் பொருத்தப்பட்டது என்ற உபதேசம் பேய்த்தனத்துக்கடுத்தது என தேவஆவியின் வழிநடத்துதல் கொண்டு பிரசங்கித்தேன். இந்த மாறுபாடான உபதேசத்தை சென்னை, சூளைமேடு, இயேசு கிறிஸ்துவின் ஜெப வீட்டார் பிரஸ்தாபப்படுத்துவது லௌகிக ஞானம் கொண்டதாகும். வேதவாக்கியங்களையும், இக்காலத்துக்குரிய செய்தியையும் கொண்டு இந்த உபதேசம் பரத்திலிருந்து வந்த ஞானம் அல்ல என திருஷ்டாந்தப்படுத்தினேன். இது குறித்து ஒரு செய்தித்தொகுப்பும் எழுதி வருகிறேன்.

## II. அர்த்தமற்ற ஒரு சிறு புத்தகத்திற்கு அர்த்தமுள்ள ஒரு சிறு விமர்சனம்

43. 16-12-2005 அன்று பொன்னேரி சகோ. டாக்டர் ராபர்ட் ராஜையா அவர்களை, அவர்களது மருத்துவமனையில் சந்தித்தேன். அங்கு சகோ.பிரன்காம் தன் செய்தி புஸ்தகங்களில் பிரசுரித்து வரும் கழுகு படம் கொண்ட ஒரு சிறு புத்தகம் என் கண்களின் பார்வையை கவர்ந்தது. அதில் பல பிரதிகள் இருந்தன. ஆதலால் இரு பிரதிகளை நான் எடுத்துக்கொண்டேன்.

44. நம் மத்தியில் சிலர் தங்களை வீண் பெருமை பாராட்டிக்கொள்வார்கள். அது ஆவிக்குரியதல்லாமல் மாம்சத்திற்குரியதாக இருக்கும். அதாவது ஓ! நான் சகோ.பிரன்காம் புத்தகங்களை தவிர வேறு புத்தகங்களை படிப்பதில்லை, தியானிப்பதில்லை, மற்றவர்களுடைய செய்தி புத்தகங்களினால் எனக்கு ஒரு பிரயோஜனம் கிடையாது என பெருமை பாராட்டிக்கொள்வார்கள். இதெல்லாம் என்ன? அற்பபுத்தி கொண்டவர்களுடைய வீண் பந்தா பெருமை ஆகும்.

45. இங்கு எனக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. சகோ.யோவேல் மூடி பரமானந்தம் என்னை ஏதாவது ஒரு பொருளில் தலைப்பு எடுத்துக்கொண்டு, அது குறித்து சகோ.பிரன்காம் எங்கெங்கு என்னென்ன பேசியுள்ளார் என குறிப்பு எடுத்து, அதை அப்படியே ஜெர்மன் பாஸ்டர் கெர்ட் ரோடேவால்ட் (Pastor Gerd Rodewald) பிரசுரிப்பது போன்று பிரசுரியுங்கள் என என்னை அடிக்கடி கேட்டு கொள்வார். சகோ.பிரன்காம் செய்தியிலிருந்து குறிப்புகளை எடுத்து, அதை பிரசுரிப்பது தான் ஒரு ஐந்துவகை ஊழியத்திற்கு கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவனுடைய ஊழியமா? இந்த ஊழியத்தில் உள்ளவன் கல்வாரி சபையை பக்திவிருத்தி அடைய செய்ய அல்ல, இயேசு கிறிஸ்துவின் ஜெபவீட்டை பக்திவிருத்தி அடைய செய்ய அல்ல, மாறாக கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைய செய்ய கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு ஊழியக்காரன். ஆக எனது ஊழியம் சகோ.பிரன்காமின் செய்தியிலிருந்து குறிப்புகளை சேகரித்து, அதற்கு ஒரு தலைப்பு கொடுத்து, அதை பிரசுரிப்பது அல்ல, என்னுடைய ஊழியம் தனித்தன்மை வாய்ந்தது என்பதை நீங்கள் சற்று சிந்திப்பீர்கள் என கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். அவர் எனக்கு உதவிகள் செய்கிறார் என்பதற்காக நான் என்றுமே அவரோடு இணைந்து சென்றதில்லை. நான் என்றுமே ஆவியானவர் என்னை வழிநடத்தும் தன்மையை விட்டு விலகினதில்லை. நான் தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்துக்குரிய செய்திக்கும் உண்மையுள்ளவனாக இருக்கவிரும்புகிறேன். அதன் விளைவாக நான் அநேக நண்பர்களை இழந்துள்ளேன். அநேகரால் வெறுக்கப்பட்டும் உள்ளேன். சகோ. பிரன்காமின் செய்தி புத்தகங்களை மொழிப்பெயர்த்துக்கொண்டிருப்பதும் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஐந்துவகை ஊழியங்கள் ஒன்றின் பணி அல்ல.

46. எனது அருமை சகோதரர் என்னை சகோ.பிரன்காமுக்குள் நிலைத்திருக்க ஆலோசனை கூறுகிறார். ஆனால் நானோ கிறிஸ்து இயேசுவுக்குள் நிலைத்திருக்க விரும்புகிறேன். ஊழியத்தின் பாதையில் கடந்த 27 ஆண்டுகளாக யாரும், எந்த மனிதனும் என்மேல் ஆதிக்கம் செலுத்த நான் அனுமதித்ததே கிடையாது. என் மேல் ஒருவர் ஆதிக்கம் செலுத்தி வருகிறார். அவர் தான் என் தலையாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. அவர்கள் பணத்தினால் காரியங்களை முறியடிக்க முயற்சிக்கிறார்கள். அவர்கள் அதை தான் செய்ய முடியும். ஏனென்றால் அவர்களிடம் கை நிறைய, வீடு நிறைய கள்ளதராசினால் சம்பாதித்த செல்வம் உண்டு. பணம் தேவை தான். மிகுந்த பணப்பற்றாக்குறை எனக்கு உண்டு. பீஸ் கட்டாததினால் என் பிள்ளைகள் இருவர் பிப்ரவரி 2006-ல் தங்கள் ஆண்டு தேர்வு எழுதவில்லை. பற்றாக்குறை என்னை என்றுமே யாருக்கும் அடிமைபடுத்தியது கிடையாது.

47. அடுத்து என்னை பொறுத்த அளவில் அது எந்ததொரு புத்தகமாயிருந்தாலும், அது ஸ்தாபன ஊழியக்காரர்களால், கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்து வழிபாட்டுக்காரர்களால், தன்னுடைய பக்தர்களால் ஸ்ரீ ராசையா பாலாசீர் லாரி முத்து கிருஷ்ணா, லார்டு நாராயண (Lord Narayana) வின் பத்தாவது மறுஅவதாரம் என்று புகழப்படுகிறவர்களால், சுருக்கமாக சொல்லப்போனால் அது யாரால் எழுதப்பட்ட புத்தகமாயிருந்தாலும் சரி, அது பரிசுத்த வேதஎழுத்துக்களை கொண்டு எழுதப்பட்டிருக்குமாகில், அவர்கள் என்னதான் எழுதுகிறார்கள், போதிக்கிறார்கள், உபதேசிக்கிறார்கள் என அறிந்து கொள்ள ஆசைபடுவேன். அவைகளை தியானிப்பேன். அதில் நன்மையான காரியங்கள் இருந்தால் அதை பற்றிக்கொள்வேன். தீமையான காரியங்கள் இருந்தால் அதை அப்படியே ஓரம் கட்டி, அதை விட்டு விலகுவேன். இது தான் பிறர் எழுதும் புத்தகங்களை குறித்து என்னுடைய காரியமாயிருக்கிறது. நான் ஒரு பிரன்காம் பக்தன் அல்ல. சகோ.பிரன்காம் பிரசங்கங்களை மட்டும் தியானிப்பேன் என்று கூற. பரிசுத்த வேதாகமத்தை கைகளில் ஏந்தாது, சகோ.பிரன்காம் செய்தி புத்தகங்களை தூக்கிக்கொண்டு திரிகிறவர்கள் ஆட்டுத்தோலை போர்த்திய ஓநாய்களே. இவர்களை குறித்து எச்சரிக்கையாயிருங்கள். எனக்கு முதலாவது பரிசுத்த வேதாகமம். இரண்டாவது தீர்க்கதரிசியின் செய்தி. மூன்றாவது இதர பிரசுரங்கள். திருத்துவ ஊழியக்காரர்களின் செய்தியிலும் கற்றுக்கொள்ளவேண்டிய காரியங்கள் நிறைய உண்டு. சகோ.பிரன்காம் கூட பிறர் எழுதிய அநேக புத்தகங்களை தியானித்தது உண்டு.

48. இப்பொழுது 28 பக்கங்கள் கொண்ட அந்த சிறு புத்தகத்தின் தலைப்பு ***கிறிஸ்துவில் மாம்சமாகிய தேவன், இக்கடைசி முடிவின் காலத்தில் மணவாட்டியில் மாம்சமாகுதல்*** என்பதாகும். நல்ல ஆவிக்குரிய தலைப்பு, ஆரோக்கியமான பொருள். ஆனால் ஆற்காடு பிரியாணிக்குள் விஷத்தை கலந்து விட்டான் நம்முடைய சத்துருவாகிய சாத்தான். சர்ப்பத்தின் தந்திரம் தந்திரமாக விஷத்தை உள்ளே நுழைப்பது தானே!

49. இந்த சிறு புத்தகத்தின் முன்பக்க அட்டையில் மே மாதம் 17-ம் தேதி 1963-வது வருடத்தில் ஆங்கில லைப் பத்திரிக்கையில் (Life Magazine) வெளியிடப்பட்டிருந்த அந்த ஏழு தூதர்களை கொண்டதான அதிசய, விநோதமான மேகவளையத்தின் படம் காணப்பட்டது. அந்த ஏழு தேவதூதர்கள் செய்தி கொண்டுவந்தபின்பு, அது மேலே எழுந்து சென்றபோது, அது கூர்நுனிகோபுர வடிவில் இருந்தது. தேவன் மாத்திரமே அவ்வாறு செய்யமுடியும். பின்பக்க அட்டையில் தீர்க்கதரிசிகளுக்கு அடையாளமான கழுகு படமும் காணப்பட்டது.


மத். 24 : 30, அப். 1 : 11, II தெச. 1 : 7–9




இப்பொழுது கவனியுங்கள், இந்த கழுகு படம் சகோ.பிரன்காம் ஊழியத்திற்கு மட்டுமே பொருந்தும். அது அவர் ஒரு தீர்க்கதரிசி என்பதற்கு அடையாளமாக இருக்கிறது. வேதத்தில் தீர்க்கதரிசி கழுகாக கருதப்படுகிறான். தீர்க்கதரிசி தான் கழுகு. தேவன் தம்மை கழுகு என்று அழைத்துக்கொள்ளுகிறார். விசுவாசிகளாகிய நாம் கழுகு குஞ்சுகள். *கே.ப.* 239, பத்தி 53, நாள் 23-8-1964. ஆனால் இந்நாட்களில் கடைசிக்கால செய்தி, செய்தி என கூறிக்கொண்டு வேதாகமத்தை அல்ல, சகோ.பிரன்காமின் ஒரு சில செய்தி புத்தகங்களை படித்து, வந்தவன் போனவன் எல்லாம் கைப்பிரதிகளை வெளியிட்டுக் கொண்டு, அதில் கழுகு படத்தையும் போட்டுக் கொண்டு இக்காலத்திற்குரிய செய்தியை பாழாக்கி வருகிறார்கள். கழுகு படத்துக்கும் அவர்களுடைய ஊழியங்களுக்கும், கைப்பிரதிகளுக்கும் சம்மந்தமே கிடையாது. தீர்க்கதரிசியின் கழுகு இவர்களுக்கு அவ்வளவு மலிவாக போய்விட்டது. ஏன்? அவர்கள் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்தவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய ஊழியக்காரர்களாயிருப்பார்களாகில், அந்த கழுகு படத்தின் தனித்தன்மையை அறிந்திருப்பார்கள். அவர்கள் அறியாததினால் தான் அவர்களை பிசாசு என்று எழுதுகிறேன். பிசாசு கழுகு படத்தையும், அந்த மேகவளையத்தையும் போட்டு ஜனங்களை ஏமாற்றுகிறான்.

50. இந்த சிறு புத்தகத்தை தொகுத்து எழுதியவர் ஊட்டி பாஸ்டர் எம். ஜான் கண்ணன். இந்த சகோதரனை நான் நன்கு அறிவேன். அவர் வீட்டில் அவரோடு கூட உட்கார்ந்து போஜனம் பண்ணியிருக்கிறேன். இவர் ஒரு காலக்கட்டத்தில் கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்து வழிபாட்டில் தீவிரமாக இருந்தார். பின் பிலேயாம் கூறினது போன்று கண்கள் திறக்கப்பட்டவன் விளம்புகிறதாவது என்று கூறி தன் பழைய வழிபாட்டுக்கு மரித்து விட்டேன் என்றார். ஆவிக்குரிய ரீதியில் இவர் காரியங்களை பார்க்கும் போது இவர் ஒரு ஆவிக்குரிய விபசாரக்காரரே. ஏனென்றால் கிறிஸ்து அல்லாத வேறொருவனை, கிறிஸ்து என கூறி அவனை தன் மணவாளனாக இருதயத்தில் ஏற்றுக்கொண்டவர். ஆதலால் தான் இவர் வஞ்சிக்கப்பட்டவர் என்கிறேன். ஆதலால் இவருக்கு கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடையச்செய்ய கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஊழியத்தில் பங்கு எதுவும் கிடையாது. நிச்சயமாக இவர் கர்த்தரால் பாஸ்டராக ஏற்படுத்தப்பட்டவரும் அல்ல. மாறாக அநேகரைப் போன்று இவரும் தன்னை தானே பாஸ்டராக்கி கொண்டார். இவர்கள் சில ஆத்துமாக்களை கொண்டு தன் பதவியை தக்க வைத்து வருகிறார்கள். ஆக தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்து வருகிறார். இக்காலத்தில் யாரும் யாரையும் தட்டி கேட்க முடியவில்லை. தவறான ஒன்றை தடுக்க முடியவில்லை. அவரவர்கள் தங்கள் தங்கள் மனம்போன போக்கில் நடந்து வருகிறார்கள். அவிசுவாசிகள் மற்றும் பாவனை விசுவாசிகள் அவர்களது வலையில் விழுகிறார்கள். இவர்களை கொண்டு அவர்கள் (பாஸ்டர்கள்) தங்கள் காரியங்களை சமாளிக்கிறார்கள். ஆனால் கிறிஸ்துவின் மணவாட்டியை யாரும் வஞ்சிக்க முடியாது. அவள் எதிலும் உஷாராக இருக்கிறவள். அவள் இவர்கள் கண்ணியில் ஒருக்காலும் விழமாட்டாள். ஏனென்றால் அவள் கிறிஸ்துவுக்குள் உலக தோற்றத்திற்கு முன்பே தெரிந்துகொள்ளப்பட்டவள்.

51. இப்பொழுது அந்த சிறு புத்தகத்தை தியானிக்க ஆரம்பித்தேன். முதலாவது அதன் முன்பக்க அட்டை பகுதியில் பிரசுரித்த மேகவளையம் கீழ் மூன்று வேதவசனங்கள் காணப்பட்டன. அவையாவன: மத்.24:30, அப்.1:11, மற்றும் 2தெச.1:7-9, இந்த வேதவசனங்கள் இந்த மேகவளையத்திற்கு பொருந்துமா என்று நிதானிப்போம். சகோ.பிரன்காம் இந்த மேகவளையம் குறித்து அது வானத்தில் ஒரு அடையாம் என்று கூறுகிறார். உயர வானத்தில் அடையாளங்கள் காணப்படும். மேலும் இந்த காரியங்கள் நிகழும் போது, பல்வேறு இடங்களில் பூகம்பங்கள் ஏற்படும். அப்பொழுது மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அந்த நாளில் லூக் 17 மனுஷகுமாரன் தன்னை மறுபடியும் வெளிப்படுத்துவார். அவர் தாமே வெளிப்படுத்தப்பட்டிருப்பார். . . வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்று எண்ணுகிறீர்களே, வார்த்தையை குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே. சத்தியத்தை குறித்தும், தேவன் இந்த மணிவேளையில் செய்கிறவைகளை குறித்தும் சாட்சி கொடுக்கிறவைகள் அவைகளே. (*தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கொரு சேவை செய்தல்,* பத்தி 167, நாள் 18-7-1965)

***52. இப்பொழுது மத்.24:30 என்ன கூறுகிறது? அப்பொழுது மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது மனுஷகுமாரன் வல்லவையோடும், மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள் மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்.***

53. ஆக இந்த அடையாளத்திற்கும், அந்த ஏழு தூதர்களால் உண்டாக மேகவளையத்திற்கும் உள்ள சம்பந்தம் தான் என்ன? மத்.24:30, வெளி.1:7 சம்பவத்தோடு சம்பந்தப்பட்டது. மத்.24:30 கர்த்தருடைய இரகசிய வருகையோடு, கிறிஸ்து தம்முடைய மணவாட்டிக்காக வரும் வருகையோடு சம்பந்தப்பட்டது கிடையாது. அப்படியிருக்க இந்த மேகவளையத்தோடு எப்படி சம்பந்தப்படுத்தி பேசலாம், எழுதலாம்? மத்.24:30 சம்பவங்கள்

ஆறாம் முத்திரைக்குரியது. இயேசு மத். 24-ம் அதிகாரத்தில் கூறியதும், 6-ம் முத்திரை திறக்கப்பட்டபோது இங்கே வெளிப்படுத்துபவன் கண்டதும் ஒன்றாகவே இருக்கிறது. இயேசு இங்கு உத்திரவ காலத்தைக் குறித்து பேசுகிறார். இது குறித்து நீங்கள் *ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு*, புதிய பதிப்பு ஆறாவது முத்திரை, பக்கம் 703 பத்திகள் 180-185-ல் தியானிக்கலாம். ஆக ஆறாவது முத்திரையோடு சம்பந்தப்பட்ட காரியங்களை சபை எடுத்துக்கொள்ளப்படும் முன், சபைக்கடுத்த காரியங்களோடு சம்பந்தப்படுத்தி காட்டுவது என்ன? இது யூதர்கள் மகிமையின் தேவனை புறக்கணித்ததின் நிமித்தம் உண்டாகும் நியாயத்தீர்ப்பு. The judgement on the Jews for rejecting the Lord of Glory. ஆக இது எந்த ஞானம்? முற்றிலுமாக இது லௌகிக ஞானம் தான்.

54. அப்.1:11ஐ பாருங்கள். அப்போஸ்தலர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில் இயேசு எடுத்துக்கொள்ளப்பட்டார். அடுத்து, எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு ஏறிப்போனரோ, அப்படியே மறுபடியும் வருவாரென்று கூறப்பட்டுள்ளது. இதுவும் வெளி.1:7 யோடு சம்பந்தப்பட்ட காரியம் தான். இது உபத்திரவ காலத்திற்கு பிறகு நடக்கும் சம்பவம். பகிரங்க வருகையில் தான் ஜனங்கள் அவரை காண்பார்கள். ஆதலால் இந்த சம்பவம் லவோதிக்கேயா சபை காலத்தில் வாழும் கிறிஸ்துவின் மணவாட்டியோடு சம்பந்தப்பட்டது இல்லை. அவர் உயர எடுத்துக்கொள்ளப்பட்டார், ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. இது என்ன? பழைய ஏற்பாடு பரிசுத்தவான்களை அவர் அழைத்துக்கொண்டு உன்னதத்திற்கு ஏறினார். (*எடுத்துக்கொள்ளப்படுதல்,* பத்தி 175, நாள் 4-12-1965) மீண்டும் என் தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீரோடே எல்லா பரிசுத்தவான்களும் வருவார்கள். சகரி.14:5. இரகசிய வருகையில், மணவாட்டியை எடுத்துக்கொள்ள வரும் வேளையில் அவர் மணவாட்டியை சந்திக்க ஆகாயத்தில் வருகிறார் என்பது உங்களுக்கு நன்கு தெரியும். ஆக அப். 1:11 வசனத்திற்கும், இந்த மேகவளையத்திற்கும் எந்தவிதமான சம்மந்தமும் கிடையாது.

55. அடுத்து 2தெச.1:7-9. இந்த மேகவளையத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது வல்லமையின் தூதரோடும் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படவில்லை. இந்த மேகவளையம் எப்படி உருவானது என்பதை உங்களுக்கு *ஏழாவது முத்திரை* செய்தி தொகுப்பில் ஆதாரங்களுடன், பல புகை படங்களுடன் விளக்கமாக எழுதியுள்ளேன். அதன் பின்பும் இப்படிப்பட்ட குழப்பத்தை ஒருவன் கொண்டு வருவானாகில் அவன் பிசாசே. இது குறித்து நீங்கள் ஏழு சபைக்காலங்களின் வியாக்கியானம் பக்கம் 159, கடைசி பத்தியை தியானியுங்கள். இதில் 2தெச. 1:7-9 கடைசியில் நேரப்போகும் அழிவை குறிக்கிறது. அதாவது இரண்டாம் மரணம் சம்பவத்திற்கடுத்த காரியங்கள் என்பதை காணலாம்.

56. இவ்வாறாக ஆதாரமற்ற சம்பவங்களோடு இந்த மேகவளையத்தை பொறுத்தி இக்காலத்துக்குரிய செய்தியிலுள்ள மக்களை குழப்பும் குழப்பவாதிகளில் இவரும் ஒருவர். ஆக மோசம் போக்குகிற கோவையும், அதன் கூட்டாளிகளும், ஊட்டியும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான். வஞ்சிக்கிற ஆவி தான். ஆதலால் இவரது சிறு புத்தகத்தை குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள். அதில் தவறான உபதேசங்கள் உண்டு. ஆதலால் அதை புறக்கணியுங்கள். **அந்த மேகவளையம் மனுஷகுமாரனை வெளி.1:14-க்கு ஒப்பாக காண்பித்தது. அதுதான் உண்மை, சத்தியம்.**

57. மேலும் இவர் தனது புத்தகத்தின் 24-வது பக்கத்தில் முதல் பத்தியின் மத்தியில் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்.
முத்திரைகள் திறப்பதென்பது என்ன? கிறிஸ்துவை வெளிப்படுத்துவதே. ஆமென். *1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் கிறிஸ்துவே தீர்க்கதரிசிக்குள் இறங்கினார். ஆமென்.* கிறிஸ்துவே அந்த முத்திரைகள். ஆகவே கிறிஸ்துவாகிய அவரே தீர்க்கதரிசியிலிருந்து வெளிப்பட்டார். ஆமென்.

58. **முன்பு பிரன்காம் கிறிஸ்து என்ற உபதேசத்தில் இருந்தவர், இன்று அதில் சற்று மாற்றம் கொண்டு போதிக்கிறார். 1963-ம் ஆண்டு கிறிஸ்து தீர்க்கதரிசிக்குள் இறங்கினார் என்கிறார். பரிசுத்த வேதாகமத்தில் கிறிஸ்து அவரது தீர்க்கதரிசிகளுக்குள், அப்போஸ்தலர்களுக்குள் அல்லது அவர் அனுப்பி, எடுத்து உபயோகப்படுத்தப்பட்ட பாத்திரங்களுக்குள் *கிறிஸ்து இறங்கினார்* என்பதற்கு சாட்சியாக ஆதாரங்கள் ஏதாவது இவர் கொடுக்க முடியுமா? இவர் ஒரு வேளை தலைகீழாக நின்றாலும் அதற்கு ஆதாரம் கொடுக்க முடியாது. ஆனால் ஒருவர் ஆதாரம் கொடுக்க முடியும். அது பாலாசீர் லாரி மட்டுமே. அவருக்குள் இருந்த ஆவிதான் இந்த பாஸ்டர் ஜான் கண்ணனையும் ஆட்கொண்டுள்ளது என்பதில் ஒரு சதவீதம் கூட சந்தேகம் கிடையாது. ஆக இந்த உபதேசம் எங்கிருந்து வந்தது? பிசாசினிடமிருந்தே.**

59. **ஒருவன் ஒரு புதிய காரியத்தைக் கொண்டு வந்து வேதவாக்கியங்களை, இக்காலத்துக்குரிய செய்தியை குழப்பும்போது, நீங்கள் *அதுவும் சரிதான்* என்று கூறுவீர்களானால் அது ஒரு பிசாசாயிருக்கிறது.** தியானியுங்கள் *ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சி*, பக்கம் 89, பத்தி 2 நாள் 14-10-1962. இவருக்குள் அன்று இருந்த ஆவியே இன்றும் இருந்து முந்தைய உபதேசத்தில் சற்று மாற்றம் கொண்டு உபதேசித்து வருகிறது. முதல் நான்கு முத்திரைகளில் காணப்பட்ட கலப்பு மாற்றம், அதே காரியம் தான் இன்று இவரிடம். இந்த போதனைகள் உங்களை அழைத்தவரால் உண்டானது அல்ல. ஆதலால் இவரது உபதேசத்திற்கு செவி கொடுத்து நீங்கள் வஞ்சிக்கப்படாதீர்கள். சத்தியத்திற்கு கீழ்படியாமல் போக உங்களுக்கு தடை செய்யும் சாத்தான் மிக்க தந்திரசாலி. உங்களை கலக்குகிறவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் அவன் தனக்கேற்ற ஆக்கினையை அடைவான்.

60. நான் திரும்ப திரும்ப எழுதுவதை சற்று கவனியுங்கள். முன்பும் இதை குறித்து எழுதியுள்ளேன். இப்பொழுது மறுபடியும் எழுதுகிறேன். பாருங்கள் இது குறித்து தீர்க்கதரிசி தமது செய்தி *கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள்,* பக்கம் 94, பத்தி 269, நாள் 25-7-1965-ல் மிகவும் விளக்கமாக கூறியுள்ளார்.

***61. என்னை குறித்து நான் பேசிகொண்டேன் என்று நீங்கள் ஒருக்கால் நினைக்கலாம். நான் ஒரு சத்தமாக இருக்க விரும்புகிறேனேயன்றி, அதற்கும் எனக்கும் வேறெந்த தொடர்பும் இல்லை. நான் மிருகங்கள் பிடிப்பவனாக (Trapper) ஆகவே விரும்பினேன். ஆனால் நான் இவ்விதம் இருக்கவேண்டுமென்று பிதாவானவர் சித்தம்கொண்டார். எனவே நான் இதை தெரிவிக்கிறேன். இதை நான் அறிவிக்க தீர்மானித்துவிட்டேன். அந்த***

***நதியினிடத்தில் பிரத்தியட்சமானவர் நான் அல்ல. அவர் பிரத்தியட்சமாகும்போது நான் அங்கு நின்று கொண்டிருந்தேன். இந்த அற்புதங்களை எல்லாம் செய்பவன் நான் அல்ல. வரப்போகும் காரியங்களை பிழையின்றி அறிவிப்பவன் நான் அல்ல. அவர் இத்தகைய செயல்களை புரியும்போது, நான் அவர் அருகில் இருக்கிறேன். அவர் என்னை தன் சத்தமாக உபயோகித்து வருகிறார். என் மூலம் அவர் பேசுவதற்கென என்னை நான் அவருக்கு முற்றிலுமாக அர்ப்பணித்துவிட்டேன்.***

*62. அது ஏழாம் தூதன் அல்ல. அது மனுஷகுமாரன் வெளிப்படுதல் ஆகும். அது தூதன் அல்ல. அவனுடைய செய்தி. மறைபொருளாயிருக்கிற தேவனுடைய இரகசியம் வெளிப்படுதல் ஆகும். அது மனுஷனல்ல. அது தேவன். தூதன் மனுஷகுமாரன் அல்ல. ஆனால் அவரால் அனுப்பப்பட்ட தூதன். மனுஷ குமாரன் என்னப்படுவது கிறிஸ்து. அவரை தான் நீங்கள் புசித்துவருகிறீர்கள். நீங்கள் மனிதனின் வார்த்தையை புசிக்கவில்லை. மனிதனின் வார்த்தைகள் தவறாகி போக ஏது உண்டு. ஆனால் நீங்களோ என்றென்றும் தவறாத மனுஷகுமாரனின் சரீரமாகிய வார்த்தையை புசித்துவருகிறீர்கள்.*

***63. இதிலிருந்து கிறிஸ்து தீர்க்கதரிசிக்குள் இறங்கவில்லை. கிறிஸ்து தீர்க்கதரிசியை தமது சத்தமாக உபயோகித்து வந்தார் என்பதே உண்மை.***

*64.* அடுத்து அந்த சிறு புத்தகத்தின் 24வது பக்க கடைசி பத்தியில் இவ்வாறு எழுதுகிறார்.
***மணவாட்டி என்று சொல்லக்கூடியவள் யார் என்றால் இக்கடைசிக்கால செய்தியாளரும், தீர்க்கதரிசியுமாகிய வில்லியம் மாரியன் பிரன்காம் அவர்களுடைய ஒவ்வொரு செய்தியையும் மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டு அதற்கு ஆமென் என்று சொல்லி அதற்கு தன்னை முற்றிலுமாய் ஒப்புக்கொடுத்தவர்ளே இயேசு கிறிஸ்துவினுடைய மணவாட்டி ஆவதற்கு தகுதியானவர்கள் என்பதே உண்மையும் சத்தியமுமாய் உள்ளது.***

65. பிரியமானவர்களே, இந்த சொல், பொய்யும், சூதுள்ளதுமாயிருக்கிறது. ஒரு பித்தலாட்டமான மாய்மாலமான உபதேசமுமாயிருக்கிறது. சகோ.பிரன்காமை மேன்மைப்படுத்தும் வஞ்சிக்கிற ஆவியாக இருக்கிறது. பிரியமானவர்களே, மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிப்பட்டு அலைகிறவர்களாயிராமல், சத்தியத்தை கைக்கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளர்ந்து பெருகுவோம். சகோ.வில்லியம் மாரியன் பிரன்காமின் சுமார் 1215 பிரசங்கங்களையும் அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டிய தேவையில்லை. இது குறித்து நான் உங்களுக்கு முன்பே எழுதியுள்ளேன். சகோ.பிரன்காம் செய்திகளில் தேவசத்தம் உண்டு. அவர் தேவஆவியினால் ஏவப்பட்டு பேசின காரியங்கள் உண்டு. அவைகளை மட்டுமே அப்படியே ஏற்றுக்கொள்வோம். மனிதனின் ஞானம், மனிதனின் வார்த்தைகள், மனிதனின் சொந்த அபிப்பிராயங்கள், யோசனைகள் உண்டு. இவைகளில் நலமானதை ஏற்றுக்கொண்டு, வேதவாக்கியங்களோடு இணையாததை விட்டுவிடுவோம். அந்நாட்களிலும் கூட கர்த்தருடைய தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் எவ்வளவோ காரியங்களை பேசியிருப்பார்கள், பிரசங்கித்திருப்பார்கள், உபதேசித்திருப்பார்கள். ஆனால் அவைகளில் தேவனுடைய சத்தம், பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட காரியங்கள் மட்டுமே நமக்கு பரிசுத்த வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் வேதவசனங்கள் எல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. அவ்வாறாகவே சகோ.பிரன்காமின் பிரசங்கங்களில் தேவ ஆவியினால் ஏவப்பட்ட காரியங்களை ஏற்றுக்கொள்வோம். அதற்கு கீழ்ப்படிவோம். அதாவது அவருடைய பிரசங்கங்களில் இக்காலத்துக்குரிய செய்தி மற்றும் லவோதிக்கேயா சபைக்குரிய ஆகாரம் உண்டு. அதை மட்டும் நாம் புசிப்போம். எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு நம்மை தகுதிபடுத்துவோம், ஆயத்தப்படுத்துவோம். இது சத்தியத்துக்கு செவியை விலக்கி கட்டுகதைகளுக்கு சாய்ந்து போகும் காலம்.

## III. இரு கோணங்களில் வகைக்கு மூன்று கடிதங்கள்

66. (அ) கர்த்தருக்குள் பிரியமான அன்பு சகோதரர் காலேப் யோசுவா அவர்களுக்கு. . . . தவறு என்று தாங்கள் சுட்டிகாட்டியுள்ள காரியங்கள் அடியேன் இடத்தில் இருக்குமேயாயின் அதை சரி செய்து கொண்டு வேதவார்த்தையுடன் சீர் பொருந்தியிருக்க மிகவும் அவசியமான ஆரோக்கியமான காரியங்களை தெளிவாக கூறியிருப்பதை கண்டு மிகவும் மகிழ்கிறேன். தசமபாகம், காணிக்கை இவைகளையும் விளக்கியிருப்பதும் மிகவும் தேவையான காரியங்களே. கிறிஸ்துவுக்குள் உங்கள் பிரியமுள்ள சகோ.ஜே. எரேமியா. திருப்பூர் 12-12-2005. (இது கடிதத்தின் ஒரு பகுதி மட்டுமே).
(ஆ) கர்த்தருக்குள் கிடைக்கப்பெற்ற அன்பான விலையேறப்பெற்ற சகோதரர் காலேப் ஜோசுவா அவர்களுக்கு உங்கள் சகோதரனும் Ex.TVS டிரைவரும், தீர்க்கதரிசி செய்தியில் 20 ஆண்டுகள் உறுதியாய் நிலைத்திருக்கும் ஜேசுதாஸ் என்ற பாண்டிதேவர் எழுதிக்கொண்ட மடல். பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு நீங்கள் எழுதி ஜெராக்ஸ் எடுத்து அனுப்பியிருந்த 13 பக்கங்கள் அடங்கிய பொக்கிஷம் கிடைக்கப்பெற்றேன். இந்த எச்சரிப்பின் செய்தி முன் குறிக்கப்பட்ட அனைவர் கையிலும் கிடைக்கவேண்டும் என்று ஜெபிக்கிறேன். .. சரியான நேரத்தில் கோதுமை மணிகள் இடத்தில் உங்கள் செய்தியை கிடைக்கப்பெற்றதற்கு தேவனுக்கும் உங்களுக்கும் நன்றி. ..சுவி ஏ. ஜேசுதாஸ் உத்தமபாளையம் (இதுவும் அவருடைய கடிதத்தின் ஒரு பகுதியே).
(இ) Dear Bro… தாங்கள் அனுப்பின பத்திரிக்கை கிடைத்தது. படித்து எச்சரிக்கை அடைந்தோம். மிகவும் பிரயோஜனமாக இருந்தது. சகோ.சி.ஆசீர்வாதம், மன்னார்குடி. (இதுவும் கடிதத்தின் ஒரு பகுதியே).

67. (அ) **வேண்டாம்**. சகோ.சி.பீட்டர், காஞ்சிபுரம்
(ஆ) அனுப்பிய செய்தித்தொகுப்பை அப்படியே திரும்பி அனுப்பியுள்ளார். இவர் சென்னை, பொழிச்சலூரைச் சார்ந்த சகோ.அந்தோணி ராஜ்
(இ) இயேசு கிறிஸ்துவில் பிரியமான சகோதரர் காலேப் யோசுவா அவர்களே! உங்களின் சகோதரனான ஜோதி எழுதுவது: . . . . மேத்யூ, ஜோசப் இவர்கள் இருவரும் எனக்கு இரண்டு கண்கள். ஆகவே அவர்கள் இருவரும் குற்றப்படுத்தி யாரும் பேசும் அளவுக்கு எந்த குற்றமும் செய்யாதவர்கள் எனவே அவர்களை விமர்சித்து எழுதவேண்டாம். நன்றி. தொடர்ந்து எழுதிக்கொண்டு இருந்தீர்கள். ஆனால் கவலை இல்லை. நாங்கள் இனிமேல் அதை பிரித்து படிக்கவே மாட்டோம். உங்கள் ஊழியம் அது தான் என்றால் செய்து கொண்டே இருங்கள். . . . உங்கள் சகோதரன் ஜோதி 14-12-2005 (இதுவும் கடிதத்தின் ஒரு பகுதி) இந்த சகோதரர் பம்மல், சென்னையை சேர்ந்தவர்.

68. அடுத்து இதோ பார், நீ என் கண்கள் இரண்டையும் குறித்து எழுதிவிட்டாய். இனி நான் நீ எழுதியவைகளை வாங்கி, அதை பிரிக்க கூட மாட்டேன். இதெல்லாம் என்ன? குழந்தைகளின் மழலைப் பேச்சே. பரலோகராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது. நான் இக்காலத்துக்குரிய செய்தியை ஏற்றுகொண்டவர்களுக்கு, எனது செய்தித்தொகுப்புகளை இலவசமாக அனுப்பி வருகிறேன். அதை பெற்று, தியானித்து, கிறிஸ்துவின் வருகைக்கு தங்களை ஆயத்தப்படுத்தவேண்டியது அவர்களுடைய கடமை. தனக்கு எல்லாம் தெரியும், அதில் தியானிக்க, அறிந்து கொள்ள எதுவும் இல்லை என்றால் ***வேண்டாம்*** என ஒரு வார்த்தை, முகவரியுடன் எழுதினால் போதும். நான் செய்தித்தொகுப்பை அந்த நபருக்கு அனுப்புவதை நிறுத்தி விடுவேன். மேலும் இது குறித்து முன்பே எழுதியும் உள்ளேன். சகோ.ஜோதி - பம்மல் தனக்கு வேண்டாம் என எழுதியுள்ளார். ஆதலால் இனி அவரை குறித்த காரியங்கள் எதுவும் செய்தித்தொகுப்பில் இடம்பெறுமாகில் அவருக்கு ஒரு பிரதி அனுப்புவேன். மற்றப்படி அல்ல.

69. ஐயா, உங்களுடைய இரு கண்களுக்கும் பார்வையில்லை என்று நான் கூறுகிறேன். ஏனென்றால் அவர்கள் இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்து வருகிறார்கள். அதோடு மட்டுமல்ல அதில் ஒரு கண் ஒரு காலத்தில் மல்டி லெவல் மார்க்கெட்டிங் வர்த்தகத்தில் பிரபலமானவர். ஆனால் நீங்களோ உங்கள் இரு கண்களுக்கும் பார்வை சரியாகவே இருக்கிறது என்கிறீர்கள். சரியாக இருந்தால் அவர்கள் எப்படி இடறினார்கள்? ஆதலால் உங்கள் இரு கண்களுக்கும் கலிங்கம் போட்டுக் கொள்ளுங்கள். நானும் உங்கள் இரு கண்களுக்கும் தேவன் பிரகாசமுள்ள மனக்கண்களை கொடுக்க வேண்டிகொள்ளுகிறேன்.

70. முடிவாக நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள். அப்.13:48 அவர்கள் திருவசனத்திற்கு கீழ்ப்படியாதவர்களாயிருந்து இடறுகிறார்கள்; அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள். 1பேதுரு 2:8. இந்த மூவர் தவிர வேறு யாரும் இதுவரை எனக்கு **வேண்டாம்** என எழுதவில்லை. சகோ. ஜோதியை நான் ஒரு முறை பார்த்திருக்கிறேன். இவர் சத்தியத்தை ஏற்றுக் கொண்டு ஒரு ஆண்டு கூட வளர்ச்சியடையாத ஒரு குழந்தை என நினைக்கிறேன். ஆக இவர் தன்னுடைய வளர்ச்சிக்கேற்றவாறு எழுதுகிறார். ஆதலால் நான் அவர் எழுதினதை பொருட்படுத்தவில்லை. அடுத்து சகோ.சி.பீட்டர் என்பவரை குறித்து முற்றிலுமாக இவர் யார் என்று எனக்கு நினைவு இல்லை. மூன்றாவது நபர் சென்னை பொழிச்சலூரிலிருந்து இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்யும் பாஸ்டர் அந்தோணி ராஜ். இவர் கடிதம் எழுதாமலே நான் அனுப்பி வைத்த செய்தித் தொகுப்பை அப்படியே திருப்பி அனுப்பி வைத்தார். இவருடைய கிரியைகள் இவர் யார் என நமக்கு எடுத்துக் காட்டுகிறது. அவர்களுடைய கனிகளினால் அவர்களை அறிவீர்கள்.

71. நானோ கெட்டு போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கேதுவான மரண வாசனையாகவும், இரட்சிக்கப்படு கிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாகவும் இருக்கிறேன். என்னுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது. அல்லேலூயா!

## IV. இந்த வீடு கலிஸ்த்ராஜ்யின் வீடாய் மல்டி லெவல் மார்க்கெட்டிங் வர்த்தகத்திற்கு தூணும் ஆதாரமுமாயிருக்கிறது.







72. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக கர்த்தர் தன்னை ஐந்து வகை ஊழியத்தில் பாஸ்டராக ஏற்படுத்தினார் என்று கூறிக்கொண்டு; தன்னைத் தானே பாஸ்டராக்கிக் கொண்ட, ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்த கள்ளகபடமுள்ள வேலையாள் கலிஸ்த்ராஜ்க்கு மல்டி லெவல் மார்க்கெட்டிங் வர்த்தக நிறுவனம் செனிகோ மார்கட்டிங் பிரைவேட் லிமிடெட்யின் கிளை அலுவலகம் யூனிக் அசோசியேட் (**Unique Associate**) மல்டி லெவல் மார்க்கெட்டிங்கில் புதுக்கடை பாஸ்டர் கலிஸ்த்ராஜ் புரிந்த சாதனைகளை பாராட்டி இவருக்கு ***சாதனையாளன் / சாதனை மன்னன்*** என்ற பட்டத்தை 20-11-2005 அன்று சூட்டி கௌரவித்தார்கள் என அறியவந்தேன்.

73. நமது நாட்டின் ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்களின் கனவை நிறைவாக்க வந்த ஆட்டுத்தோலை போர்த்திய ஓநாய், பாஸ்டர் கலிஸ்த்ராஜ்யின் வர்த்தக விளம்பரத்தை கீழே தருகிறேன்.


நமது ஜனாதிபதி அப்துல்கலாம் கனவை நினைவாக்க
வேலை தேடாதே! வேலை கொடுங்கள்!!
எதையும் உற்பத்தி செய்யவோ! விற்கவோ; வாங்கவோ,
ஆட்களை சேர்ப்பதோ தேவையில்லை.
நேர்மையும், நன்றியுணர்வும் இருந்தால் போதும்,
சாமர்த்தியம் வேண்டாம்.
படித்தவர், படிக்காதவர் என்ற பாகுபாடில்லாமல்
ஆண், பெண் அனைவருக்கும் அரிய வாய்ப்பு
வேலையில் இணைந்து சம்பாதிக்க தொடர்பு கொள்ளுங்கள்.
Pr. F. கலிஸ்த்ராஜ், Cell : 093444 11208, 04651 - 203453
நண்பா! ஏழையாக பிறப்பது தவறில்லை - தொடர்ந்து
ஏழையாக வாழ்வது தான் தவறு.

Ph: 954651-203453
ALLELUIAH WORLD WIDES
"ஏழையாக பிறப்பது தவறில்லை தொடர்ந்து ஏழையாக வாழ்வது தான் தவறு"
GOLDEN OPPORTUNITIES
நீங்கள் எதுவாக மாற நினைக்கிறீர்கள்!
அதுவாக நினைத்துக் கொள்ளுங்கள்.
நீங்கள் நினைப்பது போல் உங்களை மாற்ற அணுக வேண்டிய முகவரி
PA. F. KALISTHRAJ
KATTUVILAI, THENGAPATTANAM P.O., K.K. DIST. - 629 173.
போன் : 954651 - 203453, 203125, 255074

யானையின் பலம் அதன் தும்பிக்கையில்
உன் பலம் உன் நம்பிக்கையில்!
வெற்றியாளன் வீழ்வதில்லை
சாதனையாளன் சாவதில்லை!
வெற்றி என்பது பொதுவானது
அது நினைப்பவர்களுக்கு மட்டும் தான்

74. பொருளாசையுள்ளவனாய் மாயம்பண்ணி தனக்கு அறிமுகமான நண்பர்கள், உறவினர்கள், விசுவாசிகள், தன் உடன் ஊழியர்கள் பலரை தன்னுடைய சாதுரியமான பேச்சினால் கவர்ந்து அவர்களுக்கு காது குத்தி, அவர்களை படுகுழிக்குள் தள்ளி, அதனால் ஓரிரு ஆண்டுகளுக்குள் பல லட்சங்கள் சம்பாதித்த சாதனை மன்னன் தான் இந்த பாஸ்டர் கலிஸ்த்ராஜ் என்பவர். இதை யாரும் மறுக்கமுடியாது. அன்றோ ஆண்டி, இன்றோ அரசன். நாளை யாரோ? சம்பாதித்த பணத்தினால் தனக்கு ஒரு அழகிய வீடு கட்டினார். அந்த வீட்டிற்கு ***கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்*** *கூடாரம்* என்று பெயரிட்டார். அந்த வீட்டை எப்போதும் கற்றாலும் ஒரு போதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண் பிள்ளைகளுடைய வீடுகளில் நுழைந்து, தான் வசப்படுத்திய பெண்கள் வந்து கூடவும் மேலும் மல்டி லெவல் மார்க்கெட்டிங் வர்த்தக மையகமாகவும் கட்டி, அதை தனது குரு மும்பை பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியானைக் கொண்டு 29-11-2005 அன்று திறந்து வைத்தார்.

75. இக்காலத்திற்குரிய செய்தியில் தங்களை பாஸ்டராக ஏற்படுத்திக்கொண்டவர்களுக்குள் மனித வசியம், மெஸ்மெரிசம், ஹிப்னாடிசம், மனவளக்கலை போன்ற மந்திர கலைகளை கற்று ஊழியம் செய்து வருவதில் இந்த சகலகலாவல்லவன் கலிஸ்த்ராஜ் போன்ற நபரை வேறு எங்கும் காணமுடியாது. நிச்சயமாக இவர் ஒரு சாதனையாளன் தான். சாதனை மன்னனின் சரீரத்தின் ஒரு பாகமாகிய அவருடைய மனைவி பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி சாத்தான் அவர்களுடைய இருதயத்தை சப்பீராளை போன்று பொய்யின் ஆவியால் நிரப்பியதால் சபையில் ஒரே பொய்சாட்சி மயம் தான். அதற்கும் ஒரு எல்லையே இல்லாமற்போய்விட்டது. ஆக கணவனும் மனைவியும் அன்றைய அனனியா, சப்பீராள் தான். நோ, நோ நான் தவறுதலாக எழுதிவிட்டேன். பொய்யின் ஊற்றே இவர்கள் இருதயத்தலிருந்து தான் புறப்பட்டு நதியாக பாய்கிறது. குரு எப்படியோ, அப்படியே சீடனும். இருவருமே ஊழிய பாதையில் வஞ்சகர்கள் தான். தேவபக்தியின் வேஷத்தை தரித்தவர்கள் தான். உன் சகாக்கள் யார் என்று சொல், அப்பொழுது நீ யாரென்று நான் கூறுவேன். ஜனங்கள் மத்தியில் சற்று கீர்த்தி பெற்றுள்ளனர். அது தேவனுடைய கிரியையென்று அவர்கள் எண்ணுகிறார்கள். ஆனால் அநேக சமயங்களில் அது பிசாசின் கிரியையாயுள்ளது.

76. ***பாஸ்டர் கலிஸ்த்ராஜ் போன்ற நபர்களையெல்லாம் இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறோம் என கூறும் மக்கள் பாஸ்டர்களாக அங்கீகரிப்பார்களானால் அதைபோன்ற வெட்கக்கேடு வேறு எதுவும் கிடையாது.*** இந்த செய்தியில் போலியான பாஸ்டர்கள் நிறைய நிறைந்திருப்பதற்கு காரணமே செய்தியிலுள்ள அவிசுவாசிகளும், பாவனை விசுவாசிகளுமே. இவர்களால் தான் தேவனுடைய நாமம் மற்றும் இக்காலத்துக்குரிய செய்தி புறமதத்தினரின் மத்தியிலும், ஸ்தாபனமக்கள் மத்தியிலும் தூஷிக்கப்பட்டு வருகிறது.

77. இந்த கூடாரத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருக்காலும் வாசம் செய்யார். அவர் இதை தம்முடைய நாமத்திற்கென தெரிந்து கொள்ளவும் இல்லை, பரிசுத்தப்படுத்தவும் இல்லை. ஆதலால் அவருடைய கண்களும், அவருடைய இருதயமும் இந்த வீட்டில் ஒருக்காலும் தங்கியிராது என்பது நிச்சயம். இந்த வீடு மல்டி லெவல் மார்க்கெட்டிங் வர்த்தகத்தின் மையமேயன்றி வேறு இல்லை ஐயா! ஆம், ***இந்த வீடு கலிஸ்த்ராஜ்யின் வீடாய் மல்டி லெவல் மார்க்கெட்டிங் வர்த்தகத்திற்கு தூணும் ஆதாரமுமாயிருக்கிறது.*** கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன், இருதயமுள்ளவன் சிந்திக்ககடவன், தியானிக்கக்கடவன்.

## V. கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது.

78. நான் ஒரு பக்தி வைராக்கியமுள்ள கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவன். எனது சிறு வயதில், அநேகமாக நான் நான்கு அல்லது ஐந்தாவது வகுப்பு படிக்கும் சமயத்தில் என் தகப்பனார் கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்தார்கள். அப்பொழுது என் குடும்பத்தில் அனைவரும் பள்ளிகளில் படித்துக்கொண்டுதான் இருந்தார்கள். இந்நிலையில் எனது மூத்த சகோதரர் திரு. ஜெபமணி அவர்கள் தனது படிப்பை விட்டு விட்டு, குடும்ப பொறுப்பை ஏற்று, எங்களுக்கு தகப்பன் ஸ்தானத்திலிருந்து குடும்பத்தை கவனித்து வந்தார்கள். கொர்நேலியுவின் நற்பண்புகள் அவரிடத்தில் காணப்பட்டன. ஸ்தாபனசபைகளை விட்டு வெளியே வந்தார்கள். ஆனால் ஸ்தாபன முறைப்படி பெற்ற முழுக்கு ஞானஸ்நானம் சரி தான், அதில் தவறு எதுவும் கிடையாது என்ற முழு உறுதியுடன் இருந்தார்கள். மறுபடியும் இன்னொரு முறை ஞானஸ்நானம் எடுக்க தேவையில்லை என தர்க்கம் செய்வது உண்டு. அவர்கள் இக்காலத்துக்குரிய செய்தியை அறிந்திருந்தாலும், அதை முற்றிலுமாக ஏற்றுக்கொள்ள திருச்சியிலுள்ள நமது ஊழியர்கள் அந்நாட்களில் பெரும்பாலும் இடறலாக இருந்தார்கள். இவர்கள் தனது 80/81 வயதில் 8-12-2005 அன்று கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்தார்கள். ஆனால் எனக்கு தகவல் ஏற்ற வேளையில் கிடைக்கவில்லை. நான் அந்நாட்களில் இப்பொழுது உள்ள புதிய இடத்திற்கு 01-12-2005 அன்று மாறி, அதை குறித்த அறிவிப்பை குடும்பத்தினருக்கு தெரிவிக்க காலதாமதம் ஏற்பட்டது ஒரு காரணம். அடுத்து எனது தொலைபேசியை இடம் மாற்ற நான் அதை துண்டித்தது மற்றொரு காரணம். முடிவாக முதன்மை பொது மேலாளர் அவர்கள் வரை தொலைபேசி இணைப்பில் காலதாமதத்தை எடுத்து சென்று, 2-1-2006 அன்று தான் இணைப்பு கிடைத்தது. அரைமணிநேர பணிக்காக பிஎஸ்என்எல் 26 நாட்கள் எடுத்து சாதனை புரிந்தார்கள். இந்த சூழ்நிலை நிமித்தம் அவர்கள் மரணம் எனக்கு ஏற்ற வேளையில் தெரிவிக்கப்படவில்லை. 8-ம் தேதி அன்று அவர்களுக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன். அது கிடைத்த போதுதான் விபரம் அறிந்து, எனக்கு தகவல் கொடுக்கப்பட்டது. பின்பு நான் சென்று குடும்பத்தினருக்கு ஆறுதலான வார்த்தைகளை கூறிவந்தேன். இவர்களுடைய மூத்த மகன் சகோ.ஜெசுபால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர். அந்நாட்களில் தான் அறிந்த மட்டும் சத்தியத்திற்கு சாட்சியாக, வைராக்கியமாக இருந்தார். ஆனால் திருச்சியில் அந்நாட்களில் இருந்த கள்ளகபடமுள்ள வேலையாட்களின் நடத்தைகளை கண்டு, அவர்களால் இடறிப்போனார், பின்வாங்கிப் போனார். இந்த குடும்பத்தினர் அனைவரும் இக்காலத்துக்குரிய செய்தியை ஏற்றுக்கொண்டு, அதன்படி நடந்து, கனிகொடுக்க ஜெபியுங்கள்.

79. இன்று திருச்சியின் நிலை என்ன? ஆவிக்குரிய சபை ஒன்றுகூட கிடையாது. ஏதோ இரு சபைகள் உண்டு. இரண்டும் புதுக்கோட்டை சகோ. ஜெயராஜ் அவர்களுக்கு காவடி எடுத்து ஆடிக்கொண்டு, அவர் கொடுக்கும் உதவிகளை பெற்று, அவருக்கு துதிபாடிக்கொண்டிருக்கிறது.

## VI. வாழ்த்த, துதிக்க, ஸ்தோத்தரிக்க ஓர் நற்செய்தி

80. 1997-ல் கல்வி சம்பந்தமான விவகாரத்தில் நான் தென்இந்திய திருச்சபை, திருநெல்வேலி டயோஷிசன் எதிராக தொடர்ந்த ஒரு உயர்நீதிமன்ற வழக்கில் எனக்கு அறிமுகமான, அதன்பின் தமிழ்நாடு மின்சார வாரியம் மீது நான் தொடர்ந்த வழக்கை நடத்தி வந்த (வழக்கு இன்னும் முடிவு பெறவில்லை.) கோவை ராஜா விவகாரத்தில் எனக்கு ஆலோசனைகள் கொடுத்து உதவிய அட்வோகேட் திரு.என். பால் வசந்தகுமார் அவர்கள் 2005, டிசம்பரில் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக நியமிக்கப்பட்டிருப்பதை அறிந்து கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். இவர் ஒரு பக்தியுள்ள, முற்றிலுமாக பணஆசையற்ற, உண்மையும், உத்தமமுமான, நேர்மையான ஒரு கிறிஸ்தவர். நியாயமான, உண்மையான, தகுதியான வழக்குகளை எடுத்து நடத்தி வெற்றிபெறுபவர். பொய், தில்லுமுல்லு, பித்தலாட்டமான வழக்குகளுக்கு இவரிடத்தில் இடமேயில்லை. பணத்துக்காக எந்த வழக்கையும் எடுத்து நடத்துபவர் அல்ல. எடுக்கும் வழக்கு நூறு சதவீதம் வெற்றிபெறவேண்டும் என நினைப்பவர். வழக்குகளில் பொய் புரட்டுக்களை பிணைத்து வெற்றி பெற முயற்சிப்பவர் அல்ல. நான் ஒரு ஊழியக்காரன் என்ற முறையில், என்னிடம் பீஸ் என்று பணம் எதுவும் கேட்காமல், வழக்கு செலவுகளுக்கு மட்டும் பணம் பெற்று திறமையாக எனது வழக்குகள் நடத்துகிறவர். கர்த்தர் சாலொமோனுக்கு கொடுத்த ஞானத்தையும், விவேகத்தையும், அறிவையும் இவருக்கு கொடுக்கவும், உயர்நீதிமன்றத்தில் இவரது கோர்ட் சத்தியத்துக்கு தூணும் ஆதாரமுமாக இருக்கவும் வாழ்த்துதல்கள் தெரிவித்தேன். நமது நாட்டில் இவரை போன்ற பண்புடையவர்கள், தகுதியுடையவர்கள் நீதிபதிகளாக பலர் நியமிக்கப்பட நாம் ஜெபிப்போம்.

## VII. நீ சார்ந்துள்ள சபையின் மீது கவனம் செலுத்தாதே அதுதான் முடிவு கால சுவிசேஷம்.

81. பிரியமானவர்களே, இங்கு நன்கு கவனியுங்கள். இக்காலத்துக்குரிய செய்திக்கு வலசரவாக்கம் பாஸ்டர் சாமுவேல் ஒரு வித வியாக்கியானம், பெரவலூர் பாஸ்டர் ஐசக் வசந்தகுமார் மற்றொரு விதமான விளக்கம், சூளைமேடு பாஸ்டர் ஜான் ஐசக், தன் கூட்டாளியின் ஆலோசனைகளை கேட்டு விநோதமான வியாக்கியானம் கொடுக்கிறார்கள். இப்படியாக இக்காலத்துக்குரிய செய்திக்கு ஆளுக்கொரு வியாக்கியானம் கொடுக்கிறார்கள். இக்காலத்துக்குரிய செய்தியோடு ஒன்றை கூட்டுவதும், குறைப்பதும் செய்தியின் பொருளை இழக்கச் செய்வது ஆகும். செய்தியின் தனித்தன்மையை பாழாக்குவதாகும். செய்தியை தாறுமாறாக்குவதாகும். ஆனால் எங்கோ சத்தியம் உண்டு, உண்மை உண்டு. அது எங்கே? அது இக்காலத்துக்குரிய சபைக்கால தூதனின் செய்தியில் உள்ளது. ஆதலால் அவன் செய்தியை பற்றிக்கொள்ளுங்கள். மனுஷர்களுடைய போதகங்களை விட்டு விலகுங்கள். உங்கள் பாஸ்டர்களுடைய சுய உபதேசங்களை புறக்கணியுங்கள். செய்தி என்ன கூறுகிறதோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள். அதற்கு எந்தவிதமான வியாக்கியானமும் தேவையில்லை. செய்தி தன்னில்தானே வியாக்கியானம் கொண்டுள்ளதாயிருக்கிறது. ஆம், உங்கள் பாஸ்டர்கள் வீணாக செய்தி செய்தி எனக் கூறிக்கொண்டு தங்கள் கற்பனைகளை, உபதேசங்களை, போதகங்களை மக்கள் மீது திணித்து அவர்களும் பரலோக ராஜ்யத்தில் பங்கு பெறுவது இல்லை, மற்றவர்களையும் பிரவேசிக்க விடுவதும் இல்லை. அவர்களும் செய்தியை கொண்டு கர்த்தருடைய வருகைக்கு தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்வதில்லை, ஆயத்தப்படவிரும்புகிறிவர்களையும் ஆயத்தப்படவிடுவதில்லை. அதைதான் அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள் என உங்கள் பாஸ்டர்கள் மீது குற்றம்சாட்டுகிறேன். இவர்கள் செய்தியை முற்றிலுமாக நிராகரிப்பது இல்லை. மாறாக செய்தியை எடுத்துக்கொண்டு அதற்கு மேல் வெள்ளையடிக்கிறார்கள். அதாவது செய்தியுடன் தங்கள்

சுய கருத்துக்களை சிறிதளவு கூட்டுவதாகும். இவர்கள் தேவபக்தியின் வேஷத்தை தரித்த சாத்தானின் செய்தியாளர்கள் எனக் கூறி உங்களை எச்சரிக்கிறேன். நாம் இன்று இவர்களுடைய பற்பல உபதேசங்களினால் சகோதர சிநேகத்தை இழந்து, அன்பை இழந்து சிதறி காணப்படுகிறோம். ஓ! இவர்கள் சபையில் பல நூறு மனிதர்கள் காணப்படலாம், சபை தோரணமாக தோற்றம் அளிக்கலாம், ஆராதனை மிக்க சுவாரசியமாக இருக்கலாம். ஆனால் அங்கு தேவன் இல்லை. ஏனென்றால் அங்கு வார்த்தை இல்லை. அங்கு இக்காலத்துக்குரிய செய்தி இல்லை. மாறாக சாத்தானின் செய்தியாளர்களின் உபதேசங்களே உள்ளது.

*82. சகோதரனே, தேவனுடைய வார்த்தைக்கு திரும்பு. தேவனிடத்தில் திரும்பு. நீ சார்ந்துள்ள சபையின் மீது எவ்வித கவனமும் செலுத்தாதே. உனக்கு விருப்பமானால் அங்கேயே தங்கியிரு. அவர்கள் உன்னை அனுமதிப்பார்களானால். ஆனால் நீ செய்யவேண்டிய முதல் காரியம், தேவனிடத்தில் திரும்பு அது உண்மை. இது முடிவு கால சுவிசேஷம். (முடிவு கால சுவிசேஷம், பத்தி 199, நாள் 3-6-1962)*

83. ஆம் எனக்கு பிரியமானவர்களே, நீங்கள் சார்ந்திருக்கும் கல்வாரி சபை மீது, சென்னை சபை மீது, இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு மீது எவ்வித கவனமும் செலுத்தாதீர்கள். நீங்கள் தேவனிடத்தில் திரும்புங்கள், இக்காலத்துக்குரிய செய்திக்கு திரும்புங்கள். உங்கள் பாஸ்டர்கள் அவர்களுடைய உபதேசங்களினால் உங்களை இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறார்கள். ஆதலால் நீங்கள் சார்ந்திருக்கும் சபையை குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

## VIII. மூன்று சுபாவங்களில் மூன்று சகோதரர்கள்

84. கடந்த செய்தித்தொகுப்பில் கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் நெருக்கமான, என் மீது அளவு கடந்த மதிப்பும் மரியாதையும் கொண்டிருக்கும், என்னை அதிகமாக நேசிக்கும் சகோ.தேவநேசனை *கோமாளி* என்று வர்ணித்துள்ளேன். இதனால் இவரது சகோதரன் சகோ.சாமுவேல் ராஜன் என்ற கதிரேசன் பொங்கி எழுந்தார். எனது ஊழியத்தை விமர்ச்சித்தார். எனக்கு நன்றி கிடையாது என்றார். நான் அவரது குடும்ப கௌரவத்தை பாழாக்கிவிட்டேன் என என் மீது சாடினார். நானோ அவரிடம், அவர் என்னை குறித்து விமர்ச்சிக்க அதிகாரம் உண்டு. ஆதலால் அவர் விமர்ச்சனத்தை நான் பொருட்படுத்தவில்லை என்றேன். ஆனால் நான் அவ்வாறு எழுதினதற்கு காரணங்களும் உண்டு. அதை அவர் புரிந்து கொள்ளவேண்டும் என கூறினேன்.

85. ஆக என்னை திட்டி தீர்த்த பிறகு, தன் தவறுகளுக்காக வருத்தம் தெரிவித்துக்கொண்டார். மனஸ்தாபப்பட்டார். இது குறித்து விவரம் அறிந்த இவரது சகோதரர் தேவநேசனும், ஆவிக்குரிய சகோதரர் ஸ்டீபன் அவர்களும் எனக்கு போன் செய்து சகோ.சாமுவேல் ராஜனுடைய நடத்தைக்கு வருத்தம் தெரிவித்தார்கள். சகோ.தேவநேசன் நான் எழுதியதில் 75 சதவீதம் தனக்கு உடன்பாடு உண்டு எனவும், ஆதலால் அவர் என் மீது கோபம் கொள்ளவில்லை எனவும் கூறினார். அது மிகவும் ஆறுதலாக இருந்தது.

86. பாருங்கள், சகோ.தேவநேசன் அடிக்கடி சுற்றறிக்கைகள் வெளியிட்டு வருகிறார். அதை செய்யவேண்டாம் என பலமுறைகள் அவரை எச்சரித்து வந்தேன். ஆனால் பலர் நான் அவரை ஊக்குவிப்பதாக நினைத்ததும் உண்டு. ஒவ்வொரு முறையும் இதுவே கடைசி முறை, இனி சுற்றறிக்கைகள் எதுவும் எழுதமாட்டேன் என்பார். ஆனால் மறுபடியும் எழுதுவதாகவே இருந்துவந்தார். இவரது சுற்றறிக்கைகளில் இவர் தன்னை:

அ. முட்டாள் ஆகிய நான் உங்களிடத்தில் பேசவோ, எழுதவோ தகுதியில்லாதவன் என்று தன்னைக் குறித்து தனக்கே சான்றிதழ் கொடுத்து கொள்கிறார்.

ஆ. மத்.5:28-ன்படி ஒரு ஆண்ணையும், பெண்ணையும் இச்சை நோக்கத்தோடு பார்க்க கூடாது, சினிமா, டி.வி. பார்க்ககூடாது. ஆனாலும் இவர்களில் தான் ஒருவன் என தன்னை வெளிப்படையாக விமர்ச்சிக்கிறார்.

இ. தான் பரிசுத்த ஆவியை பெறவில்லை எனவும் எழுதுகிறார்.

ஈ. நகை போடக்கூடாது என எழுதுவார். ஆனால் அவருடைய மனைவி நகை அணிந்திருப்பார்கள்.

உ. திருமண அடையாளமாக தாலி / மோதிரம் அணியக்கூடாது என எழுதுவார். ஆனால் அவருடைய மனைவி தாலி அணிந்திருப்பார்கள்.

ஊ. இவரது மனைவி இன்னும் இரட்சிக்கப்படவில்லை. ஆதலால் இந்து கோவில்களில் நடக்கும் கொடை, மற்றும் திருவிழாக்களுக்கு தனது மனைவியை அனுப்பிவைப்பார்.

பொதுவாக இவரது அனைத்து குடும்ப காரியங்களும் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாகவே இருக்கும். அப்படியிருந்தும் சுற்றறிக்கைகளுக்கு மட்டும் குறைவு இல்லை. ஆதலால் தான் நான் அவரை நல்லெண்ணத்துடன், அவர் மேல் கொண்டுள்ள அன்பினிமித்தமாக கண்டிக்க ஆரம்பித்தேன்.

87. இவ்வாறாக தன்னை வர்ணித்துக்கொண்டு தேவனுடைய சபைக்கு சுற்றறிக்கை மூலமாக உபதேசங்களை, புத்திமதிகளை எழுதுகிறார். இவரது காரியங்கள் ஒரு புத்தி சுயாதீனம் இல்லாதவனுடையதாகவே எனக்கு தோன்றியது. ஆனாலும் இவரது உபதேசங்கள், புத்திமதிகள் பல ஆரோக்கியமுள்ளதாகவே இருந்தது. இதனால் அவரை புத்தி சுயாதீனமில்லாதவர் என்று அழைப்பதிலும் கோமாளி என அழைப்பதே எனக்கு நலமாக தோன்றினது. ஏனென்றால் சர்க்கஸ்களில் கோமாளிகளாக நடிப்பவர்கள் புத்திசாலிகளாக மக்களை சிரிக்க, சிந்திக்க வைப்பார்கள். அந்த கோமாளி போன்று தான் இவரது காரியங்களும் எனக்கு புத்திசாலித்தனமாகவும், அதே நேரத்தில் சிரிப்புக்குரியதாகவும் காணப்பட்டது. ஆதலால் தான் அவரை கோமாளி என வர்ணித்தேன்.

88. ஆனாலும் சகலத்தையும் அவர் நன்மைக்காகவே எழுதினேன். நான் எழுதியதை வாசித்த பின் அவர் தன்னைத்தானே சீர்தூக்கிப்பார்த்து தன் காரியங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, தன்னை முற்றிலுமாக திருத்திக்கொண்டு இனி அவ்விதமாக எதுவும் சுற்றறிக்கைகள் எழுதமாட்டார் என கிறிஸ்துவுக்குள் முழுநம்பிக்கை கொண்டிருந்தேன். ஆக சகோ. தேவநேசனையோ அல்லது அவரது குடும்பத்தினரையோ புண்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தோடு எழுதாமல், உள்ளதை உள்ளது என்று பாரபட்சமில்லாமல் எழுதினேன். அது அவரது குடும்பத்தில் யாரையாவது புண்படுத்தியிருக்குமானால் அதற்காக மனஸ்தாபப்படு கிறேன்.

89. சென்னையில் இவரது தகப்பனார் ஒரு கோடிசுவரர். ஆனால் ஒரு தாழ்மையின் சின்னம். வீட்டில் கார் மற்றும் பைக் போன்ற வாகன வசதிகள் இருந்தாலும் இன்னும் அந்த மிக்க பழமையான சைக்கிள் சவாரி தான்

இவருக்கு. ஒரு இந்து குடும்பம். ஆனால் அதில் அதிக பக்தி நாட்டம் எதுவும் இல்லை. ஆண் மக்கள் ஐந்து பேர், பெண் ஒருவர் என நினைக்கிறேன். ஆண்களில் கடைசி நபர் தவிர இதர நான்கு பேரும் கிறிஸ்துவுக்குள் மிக்க பக்தி வைராக்கியமாக உள்ளனர். இதில் மூத்தவர் தான் சகோ.தேவநேசன். இந்த நான்கு பேரில் மூன்று பேர்கள் (மூத்தவர், இரண்டாவது நபர், நான்காவது நபர்) இக்காலத்துக்குரிய செய்தியில் மிக்க தீவிரமாக உள்ளார்கள். மூத்தவர் சகோ.தேவநேசன், என்னை நீங்கள் என் வலது கண் என கூறுவார். முடிவில் நான் சொன்னதை நீர் கேளும் என்பார். இந்நாட்களில் உண்மையும் உத்தமுமான வியாபாரம் செய்யவேண்டும். கள்ளதராசு கர்த்தருக்கு அருவருப்பானது என்பதை மனதில் கொண்டு அரிசி வியாபாரம் செய்து வருகிறார். மிக மிக மலிவான விலையில் உயர்ந்த ரக அரிசிகளை விற்பனை செய்து வருகிறார். நீங்கள் அவருடைய கடையில் உங்கள் தேவைகளை வாங்கி பயன்பெறுங்கள். அவர் கடை விலாசம்: T. ஜெயபாண்டியன் அரிசி வியாபாரம், 17 சிவன் கோயில் தெரு, வைரமுத்து திருமண மண்டபம் அருகில், கோடம்பாக்கம், சென்னை - 600 024 (கோடம்பாக்கம் பவர்ஹவுஸ் பஸ் ஸ்டாப் இறங்கவும், அம்பேத்கார் சிலைக்கு நேர் எதிர் சந்து)

90. இரண்டாவது நபர் சகோ.டேவிட் ராஜன் என்ற திருப்பதி ராஜன் இக்காலத்துக்குரிய செய்தியில் மிக்க ஆழமாக உள்ளவர். நிதானத்துடன் பேசும் ஒரு சகோதரன். தான் அறிந்த மட்டும் அதில் நிலைத்திருக்கவேண்டும் என்ற வாஞ்சை கொண்டவர். ஒரு காரியத்தை குறித்து சகோதரனே இது என் நிலை, நான் தவறாக இருந்தால் சரிபடுத்துங்கள் என கூறும் தாழ்மை குணம் கொண்டவர். ஆதலால் என்னை அதிகமாக கவர்ந்தவர்.

91. மூன்றாவது நபர் சகோ.சாமுவேல் ராஜன். தனக்கு அதிகம் தெரியும், யாரும் தனக்கு போதிக்கவேண்டிய தேவையில்லை என்ற மனப்பக்குவம் கொண்டவர். வலசரவாக்கம் பாஸ்டர் சாமுவேல் அவர்களின் பக்தன். பாஸ்டர் சாமுவேல் போன்று தரமான, நேர்மையான, சத்தியத்தை நன்கு அறிந்த ஊழியக்காரர்கள் யாரும் இப்பூமியில் கிடையாது என அவருக்கு சான்றிதழ் கொடுக்கிறார். ஆக இக்காலத்துக்குரிய செய்தியில் உள்ள மூன்று சகோதரர்களும் மூன்று கோணங்களில் எனக்கு காணப்படுகின்றனர். இப்பொழுது இந்த குடும்பத்தினர் என்னை புரிந்து கொள்வார்கள் என நினைக்கிறேன். இந்த குடும்பத்தில் தகப்பனார், தாயார் மற்றும் ஐந்தாவது சகோதரனும், இவர்களது சகோதரி குடும்பத்தினரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, இந்த குடும்பத்தினர் யாவரும் கர்த்தரையே சேவிக்க ஜெபியுங்கள். உங்களுடைய ஜெபம் இவர்களுக்கு தேவை. ஜெபமே ஜெயம்.

## IX. வீண் அலுவற்காரன் கோவை ராஜாவின் துன்மார்க்கத்திற்கேதுவான மூர்க்கவெறி

92. நான் 2006 பிப்ரவரி செய்தித்தொகுப்பை எழுதி முடிக்கும் தருவாயில் இருந்தபோது, எரிந்து போடப்பட்டு காய்ந்து போன செத்தையாகிய கோவை ராஜாவினிடமிருந்து பல தலைப்புகளில் 9 பக்கங்கள் கொண்ட சுற்றறிக்கை 4-1-2006 அன்று எனக்கு கிடைத்தது. இந்த குட்டி சாத்தான் குள்ள நரி என்னை குறித்து தீதாக தன் மனம்போன போக்கில் எழுதி பல சுற்றறிக்கைகள் அவ்வப்போது வெளியிட்டுக்கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். உண்மைக்கும் அவருக்கும் எந்தவிதமான ஐக்கியமும் கிடையாது. சாத்தானை எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் ஓடிப்போவான் என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது. ஆதலால் நான் அவரை எதிர்த்து நிற்பேன். அவர் ஓடிப்போவது நிச்சயம். சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய் சாத்தானை என் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார். பாருங்கள், இவர் எனக்கு ஒரு கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய சகோதரனாயிருப்பாராகில், நான் என்றோ அவரை மன்னித்து, அவர் சுற்றறிக்கைகளுக்கு மறுபதில் கொடுக்காது, அனைத்தையும் மறந்து, மறதி என்னும் கடலில் தூக்கி எறிந்திருப்பேன். ஆனால் இவர் சாத்தானாக, பிசாசாக, ஒளியின் வேஷத்தை தரித்த தூதனாக இருப்பதால், நான் இவரை எதிர்த்து நிற்க வேண்டியவனாயிருக்கிறேன். ஏனென்றால் சாத்தானை மன்னியுங்கள் என்று வேதம் எங்கும் கூறவில்லை. மாறாக அவனை எதிர்த்து நில்லுங்கள் என்றே வேதம் கூறுகிறது. ஆதலால் சகோ.காலேப் யோசுவா பதிலுக்கு பதில் செய்கிறார் என்ற பேச்சுக்கு இடமேயில்லை. பிசாசுக்கு எதிர்த்து நிற்கிறேன். அதுவே காரியம்.

93. **இந்த பிசாசினுடைய சுற்றறிக்கையின் பொருளடக்கம் பின்வருமாறு:**
அ) 24-12-05 தேதியிடப்பட்டு **உள்ளே** என்ற தலைப்பில் சுற்றறிக்கையின் பொருளடக்கங்கள் குறித்து எழுதப்பட்டிருந்தது. - 1 பக்கம்.
ஆ) அடுத்து தேதியற்ற **பாஸ்டர் சகோ. எல்.லாரென்ஸ் (குன்னூர்) அவர்களின் மறுப்பு** என்ற தலைப்பில் எழுதப்பட்டிருந்தது. அதாவது பாஸ்டர் லாரென்ஸ்; கோவை - சூலூர் பாஸ்டர் குருவன்னனிடம் கோவை ராஜா விரகதாபத்தினாலே பொங்கி தனது சபையில் உள்ள மற்றொரு ஆணோடே அவலட்சனமான ஆண்புணர்ச்சியை நடப்பித்ததாக அந்நாட்களில் தான் எதுவும் சுற்றறிக்கை வெளியிடவில்லை என மறுப்பு தெரிவித்ததாகவும்; அதை பாஸ்டர் குருவன்னன் இந்த கட்டுக்கதை மாஸ்டரிடம் 15-12-05-ல் கூறியதாகவும் குறிப்பிடுகிறார். ஆக இது குறித்து பாஸ்டர் லாரென்ஸ்க்கு ஒரு வக்கீல் நோட்டீசு அனுப்பி விளக்கம் கேட்கப்போவதாக கூறி, ஆனால் பாஸ்டர் லாரென்ஸ் தன் இப்போதைய குடும்ப சூழ்நிலையிலும், கஷ்டத்திலும் கோர்ட் கேஸ் என்று அலைக்கழிக்கப்படுவதை தவிர்க்கலாம் என அக்கிரமத்தின் இரகசியம் தெரிவிக்கிறது. அடுத்து சகோ.காலேப் யோசுவா பழிவாங்கும் எண்ணத்தோடு இப்படிப்பட்ட கற்பனைகளை திரித்து சுற்றறிக்கை வெளியிட்டுள்ளார் என்பதை விசுவாசிகளுக்கு வெளிப்படுத்தி, என் மீது மிக கடுமையான நடவடிக்கை எடுக்கப்போவதாக மிரட்டுகிறார். ஆக இந்த அனுதாபம், மிரட்டல் எல்லாம் என்ன? ஆடு நனைகிறது என்று ஓநாய் கவலைப்பட்ட கதைதான். குரைக்கிற நாய் கடிக்காது என்பது அனைவருக்கும் தெரியும். ஆக இந்த ஓநாயின் கவலை - 1 பக்கம்.

94. கொடுமையினாலும், வஞ்சகத்தினாலும் தன் இருதயத்தை நிரப்பியுள்ள கோவைராஜா, தன் சென்னை கூட்டாளி பாஸ்டர் ஜான் ஐசக்கையும், அவரை குறித்து ஒன்றுமே அறியாத புதுசு, அப்பாவி பாஸ்டர் குருவண்ணனையும் தனித்தனியே ஊட்டி பாஸ்டர் லாரென்ஸ்யிடம் தூது அனுப்பி, சகோ.காலேப் யோசுவா சபைக்கு எழுதியபடி சகோ.கே.ராஜா விரகதாபத்தினாலே பொங்கி, மற்றொரு ஆணோடே அவலட்சனமான ஆண்புணர்ச்சியை நடப்பிக்கவில்லை என எழுதிகொடுங்கள்; சகோ. கே.ராஜா இக்காலத்துக்குரிய செய்தியை நன்கு அறிந்தவர், அவரை போன்ற அறிவாளிகள் நமக்கு தேவை, நாம் அவருடைய ஊழியத்தை உற்சாகப்படுத்துகிறவர்களாக இருக்கவேண்டும் என மிக்க வஞ்சகமாக பேசி அந்த காட்டு ஜீவனைப் போன்று நடித்திருக்கிறார்கள். ஆக நடந்த ஒரு சம்பவத்தை நடக்காத ஒன்றாக எழுதி கொடுத்து ஒரு நல்நடத்தை

சான்றிதழ் (Conduct Certificate) ஒன்று கேட்டிருக்கிறார்கள், மன்றாடியிருக்கிறார்கள், காலில் விழுந்திருக்கிறார்கள். பாஸ்டர் லாரென்ஸ் அவர்களை தூக்கியெடுத்து, அவர்களை தங்கள் கால்களில் நிற்கவைத்து, முகத்தில் தார் பூசி அனுப்பியிருக்கிறார்.

95. கோவை கொடியவனுடைய கொடூரமான நடத்தையினால் பாதிக்கப்பட்ட சகோதரர் இன்னும் பாஸ்டர் லாரென்ஸ் சபையில் தான் இருக்கிறார். தன் இருதயத்தை வெறியினால் நிரப்பி அயோக்கியதனமான காரியத்தை நடப்பித்த இந்த ராஜாவை இனி நீ ஊட்டிக்கு நேராக தலைவைத்து கூட படுக்கக்கூடாது என எச்சரித்து அனுப்பினார்கள். பால் குடித்துக்கண்ட பூனை சும்மாயிருக்காது. அது பழையபடி பால் இருக்கும் இடத்தையே நாடும். அந்த சொற்படி, இந்த காமக்கிறுக்கன் மீண்டும் ஊட்டிக்கு வந்தார். அவரை, அவரால் பாதிக்கப்பட்ட சகோதரன், பாஸ்டர் லாரென்ஸ் வீட்டில் வைத்து செம்மையாக அடித்து உதைத்தார். இந்த அடியை இன்று ஆண்புணர்ச்சிக்காரனாகிய கோவை ராஜா மறந்துவிட்டார் போலும். ஆனால் அவர் அடிப்பட்டு கிடந்த அந்த அலங்கோலக் காட்சியை கண்டவர்கள் இன்று வரை மறக்கவில்லை. அந்த அடியோடு ஓடியவர் தான் சுமார் 10 ஆண்டுகளாக ஊட்டிபக்கமே வரவில்லை. பாஸ்டர் லாரென்ஸ் அந்நாட்களில் இந்த சம்பவம் குறித்து சபைகளுக்கு அறிவித்தார். ஆக நடந்த ஒரு சம்பவத்தை நடக்கவில்லை என எழுதிக்கொடுக்க முடியாது எனக் கூறி தூதுவர்கள் இருவரையும் பாஸ்டர் லாரென்ஸ் திருப்பி அனுப்பிவிட்டார்.

96. பாஸ்டர் லாரென்ஸ் தன் வேண்டுகோளுக்கு இணங்காததால், அவருடைய ஏழ்மை நிலையை சாதகமாக்கி கொண்டு அவருக்கு வக்கீல் நோட்டீசு அனுப்பி, நான் அவரை கோர்ட்டுக்கு இழுத்தடிப்பேன், அவர் அதில் சோர்ந்து போவார் எனக்கூறி, அவரை பயமுறுத்தினார். பாஸ்டர் லாரென்ஸ் செய்யாத காரியங்களை செய்ததாக கூறி, பல சம்பவங்களை ஜோடித்து எழுதி அவர் மீது குற்றச்சாட்டுக்களை கூறி வக்கீல் நோட்டிஸ் அனுப்பினார். அவரும் அதற்கு தகுந்த பதில் வக்கீல் மூலமாக கொடுத்துள்ளார்.

97. இந்த சர்ப்பம் என்று சென்னை, சூளைமேடு, இயேசு கிறிஸ்து ஜெபவீட்டுக்குள் நுழைந்ததோ, அன்று முதல் தேவனுடைய மனுஷர்கள் மீது அபாண்டமான பழிகளை சுமத்தி, அவர்கள் ஊழியங்களை கறைப்படுத்த முயற்சித்து வருகிறது. அதற்கு அடைக்கலமாக இயேசு கிறிஸ்து ஜெபவீடு இருந்து வருகிறது. பாஸ்டர் ஜான் ஐசக் பக்கவாத்தியமாக இருந்து வருகிறார். இவர்கள் இருவராலும் தேவனுடைய பிள்ளைகளை ஒருக்காலும் சேதப்படுத்த முடியவே முடியாது. ஏனென்றால் சாத்தானுடைய தலை ஏற்கனவே நசுக்கப்பட்டாயிற்று. இந்த சாத்தானையும் அவனைச் சார்ந்த பக்கவாத்தியங்களையும் தேவன் அக்கினியும் கந்தகமுமாகிய கடலிலே தள்ளுவார்.

98. பாஸ்டர் குருவண்ணன் இந்த திருடனுக்கு சில ஆயிரங்கள் (சுமார் ஏழு ஆயிரங்கள் என கேள்விப்பட்டேன்.) கடனாக கொடுத்திருக்கிறார். ஏமாற்றுக்காரன் இதை அவரிடமிருந்து ஏமாற்றி பெற்றது தான். இந்த பணத்தை திரும்ப பெறவேண்டும். குட்டிச்சாத்தானோடு கூடவே இருந்து, நாடகம் ஆடித்தான் அந்த பணத்தை திரும்பபெறமுடியும், அதுவரை அவருடைய நட்பு தேவை என பாஸ்டர் குருவண்ணன் நினைக்கிறார். அது நடக்காத காரியம் என்று அவருக்கு தெரியவில்லை. அவன் மகாதந்திரசாலி ஆயிற்றே! ஆதலால் இனி வஞ்சகனிடமிருந்து கொடுத்த பணத்தை இவரால் திரும்ப பெற முடியாது.

99. பாஸ்டர் ஜான் ஐசக் நிலையும் அது தான். மோசடிக்காரனை புகழ்ந்து, புகழ்ந்து பேசி எழுதிய நாட்களை சபைகளினால் மறக்கமுடியாது. இந்நிலையில் கோவை ராஜாவின் காரியங்கள் தவறு எனக் கூறினால் வெற்றிலைப்போடாத ஜனங்கள் கூட வெற்றிலைப் போட்டு தன் முகத்தில் காரி துப்பினால் என்னபண்ணுவது என்ற பயத்தினால் சாப்பாட்டை வாயில் வைத்துக்கொண்டு விழுங்கமுடியாமல், கக்கவும் முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார். அந்தோ, பரிதாபமான நிலை.

100. இந்த தூதுவர்கள் இருவர்களுடைய நடத்தைகள் குறித்தும் பல கேள்விகள் எழும்பியுள்ளன. இவர்களுடைய நடத்தைகளும் சரியில்லை. ஆதலால் தான் இனம் இனத்தோடு சேர்ந்துள்ளது என்கிறார்கள். உன் நண்பர்கள் யாரென்று சொல், அப்பொழுது நீ யாரென்று நான் சொல்லுகிறேன் என்ற பழமொழி இவர்களுக்கு பொருந்தும். ஊட்டி, கோவை, திருப்பூர், சென்னை போன்ற இடங்களிலிருந்து ஓட ஓட விரட்டியடிக்கப்பட்ட இந்த நபருக்கு இத்தனை மரியாதை இந்த தூதுவர்களிடம் ஏன்? நிச்சயமாக காலம் அதை வெளிப்படுத்தும். கர்த்தருக்கு சித்தமானால் நானே அது குறித்து ஏற்றவேளையில் எழுதுவேன்.

101. இங்கு மற்றொரு காரியத்தையும் எழுத விரும்புகிறேன். சென்னை கூட்டாளி தன் கோவை கூட்டாளிக்கு இவ்வாறாக வக்காலத்து வாங்குகிறார்; பாருங்கள் கோவையார் தன் மாம்சத்தில் அநேக தவறுகளை செய்திருக்கலாம், இனியும் செய்யலாம். அதை நாம் மன்னித்து மறந்துவிடவேண்டும். ஏனென்றால் அவர் இக்காலத்துக்குரிய செய்தியை நன்கு அறிந்தவர். அவரிடத்தில் செய்தி இருக்கிறது எனக் கூறி தன் சபையாரை ஏமாற்றுகிறார்,வஞ்சிக்கிறார்.

102. நான் ஆங்கிலத்தில் அரைகுறை வேக்காடு. என்னுடைய ஆங்கிலப் பேச்சைக் கண்டு படிப்பறியாத சில நண்பர்கள், பாருங்கள், அண்ணாச்சி என்னா ஆங்கிலம் பேசுகிறார் என என்னை பெருமையாக பேசுவார்கள். காரணம் என்ன? அவர்களுக்கு ஆங்கில வாசனை சுத்தமாக கிடையாது. ஆதலால் என் அரைகுறை ஆங்கிலம் அவர்களுக்கு பெரிதாக தோன்றும். ஆனால் ஆங்கிலம் அறிந்தவர்கள் என் ஆங்கில பேச்சைப் பார்த்து என்னுடைய ஆங்கில அறிவு சுமார் என்பார்கள். அது போலதான் பாஸ்டர் ஜான் ஐசக்கினுடைய காரியமும் இருக்கிறது. கூட்டாளிக்கும், அவரை சார்ந்தவர்களுக்கும் இக்காலத்துக்குரிய செய்தியின் வாசனை சுத்தமாக கிடையாது. ஆதலால் செய்தியில் அரைகுறை வேக்காட்டை பார்த்து, ஓ! என்னா செய்தி இவரிடம் இருக்கிறது எனக் கூறி அவரை உயர்த்துகிறார்கள், ஆனால் அவர்களோ வஞ்சிக்கப்படுகிறார்கள். இது தான் சென்னை கூட்டாளி மற்றும் அவரை சார்ந்தவர்களுடைய காரியம்.

103. இப்பொழுது பாருங்கள், ஒரே ஊற்று கண்ணிலிருந்து தித்திப்பும், கசப்புமான தண்ணீர் சுரக்குமா? அத்திமரம் ஒலிவ பழங்களையும், திராட்சைச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்று தித்திப்பான ஜலத்தை கொடுக்கமாட்டாது. (யாக்.3:7) இதிலிருந்து மாம்சகிரியைகள் உள்ளவனிடத்தில் ஆவிக்குரிய கிரியைகளை ஒருக்காலும் காண முடியாது என்பதை ஆவிக்குரியவர்கள் அறிவார்கள். ஆதலால்

பாஸ்டர் ஜான் ஐசக் கூற்று முற்றிலும் தவறானது. இவருக்கு வேதவாக்கியங்களிலும், இக்காலத்துக்குரிய செய்தியிலும் போதுமான பழக்கமில்லை, அனுபவமில்லை. ஆனாலும் இவரை குறித்து பெருமையாக நினைத்துக்கொண்டு, நட்பின் நிமித்தமாக ஒரு கூட்டம் ஜனங்கள் இவரை சார்ந்து மோசம் போய்கொண்டிருக்கிறார்கள். நட்பு இவர்களை கீழ்த்தேசத்திலிருந்து மேல்தேசம் கொண்டு செல்லாது. ஆதலால் இயேசு கிறிஸ்து ஜெப வீடு தன்னைத்தானே சோதித்துப் பார்த்து நலமானதை பற்றிக்கொள்ள வேண்டிய காலக்கட்டத்துக்குள் இருக்கிறது என்பதை அவர்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

104. ஒரு பெண் விஷயத்தில் சிக்கி ஒரு ஆண்டுகாலமாக (1994-1995) பாஸ்டர் லாரென்ஸ் வீட்டில் அடைக்கலம் கொண்டு, அவருடன் பந்தியில் அமர்ந்து வயிறு புடைக்க தின்றுவிட்டு, இன்று நடந்த காரியத்தை நடக்கவில்லையென ஒரு நல்நடத்தை சான்றிதழ் கொடு என்று கேட்க, அவர் மறுக்க, உடனே அவர் மீது அநேக நடக்காத காரியங்களை பிணைத்து அதற்கு கண், மூக்கு வைத்து அவருக்கு ஒரு வக்கீல் நோட்டீஸ் கொடுக்கும் அளவுக்கு இவர் துணிந்தது என்ன? அது ஒரு பெரிய விசுவாச துரோகம் அல்லவா? நீங்கள் அன்று அவர் வீட்டில் சோற்றை திண்ணீர்களா அல்லது அவர் வீட்டார் நரகல்களை புசித்தீர்களா? பேலியாளின் மகனே, உனக்கு கழுத்தில் ஒரு டையும், கைகளில் ஒரு பிரிப்கேஸ்சும், கால்களில் ஷுவும் தேவைதானா? இதை கொண்டு தானே நீ ஊரை ஏமாற்றுகிறாய்? கள்ளகபடமுள்ள வேலையாளே, ஒரு நாய் நன்றியுள்ள மிருகம். ஆனால் நீயோ? உங்கள் நடத்தைகளே நீங்கள் யாரென்பதை படம் பிடித்து காட்டுகிறது. தேவனுடைய சபை ஒருக்காலும் உங்களையும் உங்கள் ஊழியத்தையும் அங்கீகரிக்காது. உங்கள் ஊழியத்தை அங்கீகரிக்கிறவன் உங்கள் துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாயிருக்கிறான். ஆனால் உங்கள் ஊழியத்தை அங்கீகரிக்கும் சபை ஒன்று உண்டு. அது சென்னை, சூளைமேடு, இயேசு கிறிஸ்து ஜெபவீடு. ஏனென்றால் அதற்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் எந்தவித சம்மந்தமும் கிடையாது.

105. உங்களுடைய வஞ்சகம், சூது, மாய்மாலம், பித்தலாட்டம், காமவிகாரம், காதல் லீலைகள், வெறிகள், விரோதங்கள், பகைகள், பொறாமைகள் போன்ற மாம்சத்தின் கிரியைகளுக்கு மேகம் போன்ற திரளான சாட்சிகள் உங்களை சுற்றி நெருக்கி, சூழ்ந்து நின்று கொண்டிருக்க, இக்காலத்துக்குரிய செய்தியிலுள்ள மக்களை உங்கள் லௌகிக அறிவினாலும், ஞானத்தினாலும் மோசம்போக்கும் பிசாசே நீ தள்ளப்பட்டு போனாய். நீ மட்டுமல்ல உன்னைச் சேர்ந்த தூதுவர்களும் தள்ளப்பட்டு போனார்கள்.

106. (1) 1-12-05 தேதியிடப்பட்ட ***நன்றி அறிவிப்பு:*** தன் மகன் பிரின்ஸ் பிரன்காம் பிரதிஷ்டை ஆராதனை மற்றும் பெயர் சூட்டும் விழாவுக்கு வருகை தந்தவர்களுக்கு நன்றி அறிவிப்பு.

(2) அடுத்து தான் 2005 டிசம்பர் அல்லது 2006 ஜனவரியில் கோவையில் நடத்தப்போகும் **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடுகள்** செய்தி கூட்டத்திற்கு ரூ.15,000/- தேவையாம், அதற்காக ஜெபிக்க கேட்டுக்கொள்கிறார். தான் மறைமுகமாக காணிக்கை கேட்கவில்லை எனவும் கூறுகிறார். லஞ்சம் வாங்கும் சிலரை குறித்து நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அதாவது அவர்கள், நான் லஞ்ச பணத்தை என் கைகளினால் வாங்கமாட்டேன். அது பாவம். ஆதலால் என் மேஜையிலுள்ள டிராயரில் பணத்தை போட்டுவிடுங்கள், அல்லது ஏதாவது ஒரு இடத்தை சுட்டிக் காட்டி அதில் போட்டுவிடுங்கள், நான் பின்பு எடுத்துக் கொள்கிறேன் என்பார்களாம். அதுபோல தான் இந்த மானங்கெட்டவனுடைய பிழைப்பும். எனக்கு ரூ.15,000/- தேவை; ஜெபியுங்கள். ஆனால் நான் மறைமுகமாக காணிக்கை கேட்கவில்லை. ஜெபியுங்கள் என்பதன் அர்த்தம் என்ன என்பதை சிந்திக்கும் ஆற்றலுள்ளவர்கள் சிந்தித்துகொள்ளுங்கள். இவர் திருவோடு எடுத்துக்கொண்டு தெரு தெருவாக திரிந்தாலும் அதில் எதுவும் விழாது. ஏனென்றால் இவரை பற்றி இக்காலத்துக்குரிய செய்தியிலுள்ளவர்கள் நன்கு அறிவார்கள். இந்நாட்களில் செய்தியை ஏற்றுக்கொண்ட புதிய விசுவாசிகள் இவருடைய சாதுரியமான பேச்சில் மயங்கலாம், மற்றப்படி பழைய விசுவாசிகள் யாரும் இவர் கண்ணியில் விழமாட்டார்கள்.

(3) அடுத்து இதுவரை சென்னை பகுதியில் நடந்த கூட்டங்களுக்கு இவர் ரூ.48,000/- செலவு செய்துள்ளாராம். யாதொரு வேலையும் செய்யாமல் வீண் அலுவற்காரனாக ஊர் சுற்றிக் கொண்டு, எவனை விழுங்கலாம் என வகை தேடிக்கொண்டிருக்கும் இந்த ஊதாரிக்கு எங்கிருந்து வந்தது இந்த ரூ.48,000/-? காசோலை மாற்றி தருகிறேன் எனக் கூறி மோசடி செய்த பணமா? அல்லது பிக்பாக்கெட் அடித்த பணமா? அல்லது லாட்டரியில் விழுந்த பணமா? அல்லது மல்டிலெவல் மார்க்கெட்டிங்கில் கிடைத்த பணமா? அல்லது சூதாட்டத்தில் அடித்த பணமா? அல்லது வீடு வாங்கி தருகிறேன் என்ற உங்கள் வாக்கை நம்பிய சகோதரனுக்கு வஞ்சகம் செய்ததினால் கிடைத்த பணமா? அல்லது கூட்டத்தின் பேரில் கைப்பிரதிகள் பிரிண்ட் செய்து, அங்கு அந்த ஊழியம், இங்கு இந்த ஊழியம் என வெற்று பேச்சினால் பலரை கவர்ந்து ஆயிரம், இரண்டாயிரம் என கொள்ளை அடித்த பணமா? அல்லது பல சுந்தர்களை வஞ்சித்த பணமா? நான் எந்த சுந்தரை குறித்து எழுதுகிறேன் என உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? ஒரு சுந்தரா, அல்லது இரண்டு சுந்தரா, கணக்கில் அடங்கா சுந்தர்களை ஏமாற்றி பணம் மோசடி செய்த உங்களுக்கு எந்த சுந்தரை குறித்து தான் ஞாபகம் இருக்கும்? நீங்கள் ஒரு இகழ்ச்சிக்குரிய பிழைப்பு வாழ்ந்து கொண்டு, ஊரை ஏமாற்றி திரிந்து கொண்டு, என்னை ஆதாரமற்ற சம்பவங்களை பிணைத்து குற்றப்படுத்தும் நீங்கள் யார்? பிசாசே! உங்கள் உருட்டும், புரட்டும், ஏமாற்று வித்தைகளும் காலேப் யோசுவாவிடம் நடக்காது. அது என்றுமே நடக்காது. உங்கள் கதை A-Z நான் அறிந்தவன். அடுத்து சென்னை, சூளைமேடு, இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு பாஸ்டர் ஜான் ஐசக் ரூ.35,000/- செலவு செய்தார் என கூட்டாளிகள் இருவர்களுடைய ஊழிய செலவு அறிக்கை.

(4) அடுத்து திருவைகுண்டம் சகோ.காலேப் யோசுவாவுக்கு மரண அடி கொடுத்து அவரை ஒரு மூலையில் உட்கார வைத்துவிட்டதாக இரு கைகளையும் முடக்கி கொண்டு ஒரு ஆரவாரம்.

(5) அடுத்து ஜாதி பிசாசு சகோ.காலேப் யோசுவாவின் முகத்திரை கிழிக்கப்பட்டதாக மற்றொரு துர்செய்தி. தன்னை நான் பறையன் என்று எழுதி விளம்பரப்படுத்தியது எத்தகைய ஜாதி பிசாசு? உனக்கு மானம், மரியாதை, சூடு, சுரணை எதுவும் இல்லையா? உன்னை நீ பறையன் என்று ஒரு பக்கம் அழைத்துக்கொண்டு மறுபக்கம் ஜாதி இல்லையடி பாப்பா என்கிறாயே, மாயமாலக்காரனே! உன் அரசியல் நாடகத்தை யாரிடம் காட்டுகிறாய்? உன்னுடைய மாயஜாலங்கள் என்னிடம் ஒருக்காலும் பலிக்கவே பலிக்காது என்பதை உணர்ந்து கொள். நீ பிசாசாக இருப்பதால் மனந்திரும்பு என்று உன்னை அழைக்க, எழுதமாட்டேன்.

(6) அடுத்து 1963-ல் இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகை எப்படி வெளிப்பட்டது என்று ஆதாரங்கள் கொண்டு நிரூபிக்கப்பட்டுவிட்டதாக ஆதாரமற்ற ஒரு ரிப்போர்ட். ஆண்டி பண்டாரம் தன்னை நான்தான் இந்நாட்டு மன்னன் என்று கூறிக்கொண்டு திரிவதில் வியப்பு ஒன்றும் இல்லை. அதே நிலைதான் இவருடையதும். பாருங்கள், ஆகஸ்ட் 2005-ல் பிரம்புஅடி முதல் மரணஅடி வரை பெற்று இந்நாட்களில் மரணப்படுக்கையில்

மரிக்கும் தருணத்தை எந்த வேளையிலும் எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் வேளையில் கூட இவர் வீம்பு இவரை விட்டு போகவில்லை. சமீப நாட்களில் இந்த சாத்தானுடைய செய்தியாளனினால் சென்னை, சூளைமேடு, இயேசு கிறிஸ்துவின் ஜெபவீட்டிற்கு காலத்தையும் அதின் செய்தியை அடையாளம் கண்டு கொள்ளுங்கள் என்ற தலைப்பில் வரைந்து கொடுத்த அருவருப்பான சித்திரத்தை காண கர்த்தர் சமயத்தை வாய்க்கச் செய்தார். அதில் சபைக்காலங்களில் தலைக்கல் 1963-ல் பொருத்தப்பட்டது என்ற தலைப்பில் ஒரு படத்தை கண்டேன். மரணஅடி பெற்ற இந்த உபதேசத்துக்கு தற்போது சவப்பெட்டியை கர்த்தருடைய பலத்தினாலும், கிருபையினாலும் தயார் செய்துகொண்டு வருகிறேன். அது முடியும் வேளையில் மரணப்படுக்கையில் கிடக்கும் இந்த உபதேசத்துக்கு மரணமும் நேரிடும். அல்லேலூயா!

(7) பாஸ்டர் லாரென்ஸ் (குன்னூர்) மற்றும் சகோ.ஆல்பர்ட் பிரேம்குமார் (கோவை) இவர்களை குறித்து மற்றொரு சுற்றறிக்கை டைப் செய்து முடிக்கப்பட்டுவிட்டது என்ற அடுத்த வெளியீடு குறித்த அறிவிப்பு. சகோ.லாரென்ஸ் குறித்த சுற்றறிக்கை வெளிவந்துவிட்டது. ஆனால் சகோ.ஆல்பர்ட் பிரேம்குமாரை குறித்த சுற்றறிக்கை ரிலீஸ்க்கு நல்ல முகூர்த்த நாள் பார்த்துக்கொண்டிருக்கிறார்போல் தெரிகிறது. இவர் பந்தா நோட்டீஸ்கள் பிரிண்ட் செய்வதன் நோக்கம் என்ன? இவரை பற்றி அதிகமாக அறியாதவர்களிடம் அந்த நோட்டீஸ்சை எடுத்து சென்று, நான் ஒரு பெரிய ஊழியம் செய்கிறேன், ஆயிரக்கணக்கான பேர் வந்து பங்கு பெறுகிறார்கள். ஆதலால் கூட்டச் செலவுகளுக்கு கொடுத்து உதவுங்கள் என பிச்சைக் கேட்டு அவர்களை வஞ்சிப்பதற்காகவே. கோவை, சகோ.ஆல்பர்ட் பிரேம்குமார் வீட்டில் இது தான் நடந்தது. இவரை குறித்து முற்றிலுமாக அறியாத அவர், மாய்மாலக்காரனுடைய பணம் பறிக்கும் வஞ்சனையை அறிந்து கொண்டார். ஆதலால் மேலும் தன்னுடைய உதவிக்கரங்களை முடக்கிகொண்டார். எத்தனை நாட்களுக்கு தான் ஒரு மனிதனை ஏமாற்ற முடியும்? பல நாட்கள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் அல்லவா! இவருடைய ஊழியத்தை குறித்து நன்கு அறிந்து கொண்டார். இவருடைய காரியங்கள் அனைத்தும் பந்தா, ஏமாற்றுவித்தை என்பதை அறிந்தவுடன் மேலும் உதவிகள் செய்வதை நிறுத்திக்கொண்டார். உடனே சகோ. ஆல்பர்ட் பிரேம்குமாருக்கு விரோதமாக சுற்றறிக்கைகள் தயார் என்கிறார். அந்த சுற்றறிக்கை தயார் என்பதும் வெறும் பந்தா எழுத்துதானா என பொறுத்திருந்து பார்ப்போம்.

107. இப்படிப்பட்ட நோட்டீஸ்களை சேகரித்து வைத்து ஜெர்மன் சகோ.கொர்ட்டு ரோடேவால்டு போன்றவர்களை ஏமாற்றியதும் உண்டு. இதில் இவருடைய மாமனாருக்கும் பங்கு உண்டு. ஆக இவருடைய ஊழியமே காதல் லீலைகளை கொண்டதும், மாறுபாடான உபதேசங்களை போதிப்பதும், சூட் மற்றும் கோர்ட் அணிந்து மக்களை ஏமாற்றி பணம் பறிப்பதும் ஆகும். ஏமாளிகள் இருக்கும் வரை ஏமாற்றுக்காரனுக்கு கொண்டாட்டம் தானே. அது தான் இவர் ஊழியத்தில் அன்று முதல் இன்று வரை நடந்து வருகிறது.

108. தீர்க்கதரிசி வில்லியம் மாரியன் பிரன்காம் ஆண்புணர்ச்சிக்காரரா? என்ற தலைப்பில் மற்றொரு ஆராய்ச்சி கட்டுரை தயார் என்ற இரண்டாவது அறிவிப்பு. எத்தனையோ பேர் ஆராய்ச்சி கட்டுரைகள் எழுதி டாக்டரேட் பட்டம் (Ph.D) பெற்றுள்ளார்கள். நான் அவர்களுக்கு குறைவு இல்லை என நிருபித்துக்காட்ட எடுத்துள்ள பிரயாசம் தானா இது? அல்லது தனக்கு துணையாக தீர்க்கதரிசியையே உள்ளே இழுத்துப்போட நினைக்கிறாரா? இதோ அவர் செய்தார். ஆதலால் நானும் செய்தேன் என்று தன்னை நியாயப்படுத்த எடுக்கும் முயற்சியா? இந்த ஆராய்ச்சி கட்டுரை எப்படியாவது அவரது ஆயுசு காலங்களுக்குள் வெளியிட்டால் சரிதான். அப்பொழுது தானே முகத்தில் எச்சி துப்புகள் விழும்.

109. (1) அடுத்து *தீர்க்கதரிசி பிரன்காமிலும் பெரியவர் இப்பொழுது இங்கே இருக்கிறார்* என்ற தலைப்பில் ஒரு செய்தி தயார் என்று தனது மூன்றாவது வெளியீடு குறித்த அறிவிப்பு. தீர்க்கதரிசி பிரன்காமிலும் பெரியவர் இப்பொழுது இங்கு உங்கள் மத்தியில் இருக்கிறார் என்று தன்னை குறித்து பிரசங்கிக்காமல், எழுதாமல் இருந்தால் சரி.

(2) சகோ.காலேப் யோசுவா மீதுள்ள சட்ட நடவடிக்கை குறித்த தற்போதைய நிலவரம் வெளியிட தயார் நிலையில் உள்ளதாக நான்காவது அறிவிப்பு. சகோ.காலேப் யோசுவா மீதுள்ள சட்ட நடவடிக்கை குறித்து எத்தனை கட்ட நிலவரம் உள்ளன என தெரியவில்லை. இந்த நிலவர கட்டங்கள் வெளியிட்டு முடியும் முன் நான் கர்த்தருடைய வருகையில் சென்றுவிடுவேன் என நினைக்கிறேன்.

(3) அடுத்து தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயல் மழையின் காரணமாக கடைசி கால செய்தியில் பாதிக்கப்பட்டவர்கள் இருந்தால் நிவாரணத்திற்காக கோவை ராஜாவை அணுக அழைப்பு. இவரிடம் வருகிறவர்களிடம் தன் ஊழியத்திற்காக நிதி கேட்டு தன் முன் உண்டியல் எதுவும் வைக்காதிருந்தால் சரி அல்லது காசோலை மாற்றி தருகிறேன், இப்பொழுது உங்கள் கையில் ஏதாவது இருந்தால் எனக்கு தந்துவிட்டு போங்கள் என மாய்மாலம் பண்ணாமல் இருந்தாலும் சரி. இது அறிவிப்பு எண் ஐந்து.

(4) முடிவாக மற்றொரு நன்றி அறிவிப்பு: இயேசு கிறிஸ்துவின் பணியிலுள்ள சகோ.கே.ராஜா மற்றும் சகோதரி. தீபாராஜா, மற்றும் விசுவாசிகள். விசுவாசிகள் என எழுதுவதைவிட நானும் என் வீட்டாரும் என்று எழுதியிருந்தால் அது உண்மையாக இருந்திருக்கும். இவ்வாறாக இவரது நடவடிக்கைகள் குறித்த நன்றி அறிவிப்புகள் - 1 பக்கம்.

110. *குழந்தை பிரதிஷ்டை மற்றும் பெயர்சூட்டும் கூட்டம் அழைப்பு:* நாள் 1-11-2005 பிரதிஷ்டை செய்து வைப்பவர்கள் (அ) பாஸ்டர் ஜான் ஐசக் (ஆ) பாஸ்டர் டேவிட் ராஜேந்திரன் (இ) பாஸ்டர் மேத்யூ செல்லப்பா. முதலாவது நபர் இவரது சென்னை கூட்டாளி. இரண்டாவது நபர் இவரது இன்றைய ரசிகன். மூன்றாவது நபர் பெண் கொடுத்த மாமனார். செய்தி சகோ. கே.ராஜா. தலைப்பு *என்ன தான் என்னில் கண்டீர்.* உம்மில் சாத்தானின் பரிபூரணம் என்பதை நாங்கள் கண்டு கொண்டோம். அதை அவர் எங்களுக்கு வெளிப்படுத்தினார். அடுத்து Our special and loving guest of denomination. (அ) Dr. ஸ்டேன்லி பீட்டர் M.A. Ph.D குடும்ப நல நீதிமன்ற ஆலோசகர். கோவை. (ஆ) டி. சுரேஷ் B.A. B.L. வழக்கறிஞர். கோவை. (இ) திரு. துரைசாமி காவல் துறை அதிகாரி (Retd) கோவை. (ஈ) திரு. சிற்றரசு, வார்டு கவுன்சிலர் (பெரியப்பா) வால்பாறை. (உ) பாஸ்டர் டேவிட் லிவிங்ஸ்டன். ஜீவவார்த்தை சபை, கோவை. இவ்வாறாக பல துறைகளில் உள்ளவர்கள் தனக்கு அறிமுகமானவர்கள் என்கிறார். ஆக இந்த விவரங்கள் - 1 பக்கம்.

111. 24-12-2005 தேதியிடப்பட்ட சுற்றறிக்கை. தலைப்பு *பேலியாளின் மகன் காலேப் யோசுவாவின் மிரட்டல் கடிதத்திற்கு ஒரு அதரடி பதில் கடிதம்.* நான் என்றும் இவருக்கு மிரட்டல் கடிதங்கள் எழுதியதே கிடையாது. அப்படியானால் இவரே அந்த மிரட்டல் கடிதம் ஒரு தயார் செய்து கொண்டு, அதற்கு ஒரு அதிரடி பதில்

கொடுக்கிறாரோ? ஏனென்றால் இவர் ஒரு சகலகலாவல்லவன். சாத்தானுடைய தந்திரங்கள் நமக்கு தெரியாதவைகள் அல்லவே. பாருங்கள் வியாபாரத்திற்காக வடை சுட்டார். அதை வாங்குவார் இல்லை. அது ஊசிபோய்விட்டது. மீண்டும் அதை எண்ணெயில் போட்டு எடுத்து விற்க பார்க்கிறார். இவர் என்னை குறித்து இதுவரை எத்தனையோ சுற்றறிக்கைகள் தாறுமாறாக, அநாகரிகமாக எழுதி அதன் மூலம் என் பெயரை கெடுக்கலாம் என நினைத்தார். ஆனால் அதை யாரும் கண்டு கொள்ளவில்லை. ஏனென்றால் அவர்களுக்கு நன்றாக காலேப் யோசுவா யார்? கோவை ராஜா யார் என தெரியும். ஆக இவர் இது வரை எழுதிய சினிமா கதைகளை யாரும் விலைகொடுத்து வாங்கவில்லை. மீண்டும் அந்த கதையையே சற்று மாற்றத்துடன் எழுதி மார்க்கெட்டிங் செய்ய நினைக்கிறார். அது அவரால் கூடாத காரியம். ஏனென்றால் அவரில் இருப்பவனை காட்டிலும் என்னில் இருப்பவர் பெரியவர். ஆக இந்த ஊசிபோன விலைபோகாத வடை வியாபாரத்திற்கும், சினிமா கதைக்கும் - 4 பக்கங்கள்.

*112. நீங்கள் மலையில் கேட்க போகும் இடி முழக்க சத்தம்:* இந்த தலைப்புக்கு தேதி எதுவும் இல்லை. இதில் பாஸ்டர் ஜான் ஐசக் ஊட்டியில் செய்த ஊழியம் குறித்த அறிவிப்பு உண்டு. அறிவிப்பு எண். 6. அடுத்து பாஸ்டர் எல். லாரென்ஸ், 1963-ல் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வந்து விட்டது என்று விசுவாசிப்பதாகவும், ஆனால் இவர் சகோ.பிரன்காமின் தீர்க்கதரிசி என்று பிரசங்கிப்பது இல்லை என்ற அறிவிப்பு. அறிவிப்பு எண்.7. மேலும் ஊட்டி பாஸ்டர் ஜான் கண்ணன் ஒரு கிறிஸ்து பிரன்காம் வழிபாட்டுக்காரர் என்ற உறுதியான அறிவிப்பு. அறிவிப்பு எண். 8. சென்னையில் 1963-ல் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வந்துவிட்டது என்ற இடிமுழக்க செய்தியில் எழுப்புதல் எதுவும் ஏற்படவில்லை. மாறாக அது வீழ்ச்சியில் வந்து தான் முடிவு பெற்றது. இப்பொழுது ஊட்டியில் ஆரம்பிக்க ஏற்பாடுகள் நடக்கிறதாம். அங்கும் ஒரு ஏமாளி பாஸ்டர் ஜான் ஐசக்கை போன்று கிடைப்பாரா என பவனி வந்து கொண்டிருக்கிறார். அங்கு இவரது பழைய கதைகளை அறிந்தவர்கள் தான் அதிகம். ஆதலால் பாதயாத்திரை அவர் நினைக்கும் அளவுக்கு வெற்றி பெறாது. ஆதலால் புது ஆதரவாளர்களை தேடி வருகிறார். கிடைப்பது கொஞ்சம் சிரமம் தான். ஆனாலும் ஜனவரி, பிப்ரவரி, மார்ச் 2006-ல் ஊட்டியில் கூட்டம் நடத்த ஏற்பாடுகள் முடிந்து விட்டது என்கிறார். முன்பு திருநெல்வேலி, நாகர்கோவிலில் கூட்டம் ஏற்பாடுகள் என்று எழுதினார். அறிவிப்புகளுக்கு ஒன்றும் குறைவில்லை. திட்டங்களை அறிமுகப்படுத்திக்கொண்டே அரசியலில் நாடகம் அரங்கேற்றப்படுவது போன்று இவரும் செயல்படுகிறார். ஆதலால் இவரது அறிவிப்புகள் எதுவும் முடிவு பெறுமா என்பதே கேள்விகுறியாக உள்ளது. எல்லாமே பந்தா திட்டங்கள் தான்! பந்தா அறிவிப்புகள் தான்! எனக்கு சமயம் கிடைத்தால் அன்று முதல் இன்று வரை இவர் வெளியிட்ட பந்தா வெளியீடுகள், அறிவிப்புகள் குறித்து ஒரு லிஸ்ட் எடுத்து வெளியிடுகிறேன். ஆக இந்த பந்தா அறிக்கைகள் - 1 பக்கம். இவ்வாறாக 9 பக்கங்களை கொண்ட சுற்றறிக்கை எனக்கு வந்தது.

113. வெட்கமான அந்தரங்க காரியங்களை செய்து, தேவவசனத்தை புரட்டி, தன்னைத்தானே புகழ்ந்து, முந்தின நடத்தைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போன பழைய மனுஷனை, ஆட்டுத்தோலைக்கொண்டு போர்த்தி மக்களை ஏமாற்றிவந்த கோவை ராஜா அவருக்கு கூட்டங்கள் ஏற்பாடு செய்து தருகிறேன் என வாக்குக்கொடுத்த சகோதரனையே ஏமாற்றி பணத்தை பகல் கொள்ளையடித்தப்பிறகு கூட்டம் எங்கே? ஊட்டியில் இனி உங்கள் பிழைப்பு நடக்காது. உங்களுக்கு இருபக்கமும் தடைகள். முதல் தடை ஆண்புணர்ச்சியினால் உண்டானது. இரண்டாம் தடை பலரை ஏமாற்றி பணம் பறித்தது. பணம் மோசடி செய்தது. ஆதலால் உங்களை தேடி திரியும் கூட்டத்திற்கு நீங்கள் மறைவு. இப்படியிருக்க மலையில் எப்படி இடிமுழக்கம் முழங்கும்? ஆட்டுத்தோலை போர்த்திய ஓநாயே உன் முகத்திரை அங்கு பலமுறை கிழிக்கப்பட்டுவிட்டதே? இனி நீங்கள் அங்கு ஏமாற்ற ஜனங்கள் இல்லை.

114. இந்த ஆட்டுத்தோலை போர்த்திய ஓநாய் தன்னை கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய கர்த்தர் சுவிசேஷகனாக ஏற்படுத்தியுள்ளார், 15 ஆண்டுகளாக ஊழியம் செய்து வருகிறேன் என்று கூறுகிறார். பிரியமானவர்களே இங்கு நன்கு கவனியுங்கள் கடந்த 2 ஆண்டுகளாக இவரது சுற்றறிக்கைகள் பல வெளிவந்தன. அதில் நீங்கள் எங்காவது ஆரோக்கியமான ஆவிக்குரிய ஆகாரத்தை கண்டீர்களா? அவரது சுற்றறிக்கைகளில் அவர் தன்னைத் தானே புகழ்ந்து கொட்டும் தற்பொழிவுகளையும், காலேப் யோசுவாவை பற்றிய அவதூறுகளையுமே நான் கண்டேன். நீங்களும் அவர் தன் வீம்புகளில் மேன்மை பாராட்டுகிறதையே கண்டிருப்பீர்கள். இப்படிப்பட்ட மேன்மை பாராட்டுதல் யாவும் பொல்லாங்காயிருக்கிறது என்பது உங்களுக்கு தெரியும். கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்தி அடைவதற்கான ஆரோக்கியமான போதனைகளை, உபதேசங்களை நான் அவருடைய சுற்றறிக்கைகளில் என்றுமே கண்டதில்லை. போதனைகளுக்கும் உபதேசங்களுக்கும் இவரது சுற்றறிக்கைகளுக்கும் சம்மந்தமே இல்லை. ஆக இவர் ஒரு பந்தா, கள்ள எழுத்தானி. ஏனென்றால் இவர் ஒரு பிசாசு.

115. ***தன் இருதயத்தில் ஊற்றெடுத்த*** *வயிற்றெறிச்சல், உக்கிரம்,* ***மூர்க்கம், மனப்பெருமை, சினம் இவைகளைக் கொண்டு அந்த நான்கு பக்க*** *சுற்றறிக்கையில் எனது* ***ஊழியப்பாதை, என் குடும்பபாதை இவற்றை குறித்து அவர் முன்பு எழுதிய விலை போகாத*** *கட்டுக்கதைகளுக்கு* ***சற்று மாற்றம் கொடுத்து, அவர் உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்த சாக்கடையை*** *அவர் எழுத்துக்களில்* ***ஊற்றியிருக்கிறார். அது தான் அந்த நான்கு பக்க சுற்றறிக்கையின் சாரம்சம். இந்த*** *வயிற்றெரிச்சலுக்கு* ***காரணம் என்ன? இவரது புளித்தமாவினால் வாந்தி எடுத்துக்கொண்டிருக்கும் இவரது 85 சதவீதத்தில் உள்ள பலர்கள், இவரை முகத்தில் துப்பி இங்கு இனி வராதே என எச்சரித்து அனுப்பிவிட்டார்கள்.*** *நன்றாக ஓடிக்கொண்டிருந்த* ***பந்தா பிழைப்பு, திடீரென்று நின்றுவிட்டது. இனி சென்னையில் ஏற்றுக்கொள்வார்*** *யாருமில்லை. ஏதோ* ***பழைய நட்புக்காக சபைக்கு வந்து செல். அது தான் இவருக்கு இன்றைய*** *மரியாதை. 85 சதவீதம்* ***உள்ளவர்கள் இவரை அடையாளம் கண்டுகொண்டது அறிந்து கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.*** *ஆக தன்னுடைய* ***பிழைப்பு நின்று போய் விட்டதே என்ற வயிற்றெரிச்சலால் என் மீது சாடியுள்ளார்.*** *அது தான் காரணம்.*

116. ரோட்டில் ஒரு குடிக்காரன் தன் மதுபான வெறியினால் யாரையாவது சிலரை, அதாவது அரசியல் தலைவர்களை, மதத்தலைவர்களை, தான் யாராலும் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களை, சில சமயங்களில் அக்கம் பக்கம் சென்று கொண்டிருப்பவர்களையும் தகாத வார்த்தையினால் தூற்றிக்கொண்டே நடனம் ஆடிக்கொண்டே செல்லுவான். இந்த நிலையில் தான் இவர் இருந்து கொண்டு என்னை தன் மனம்போன போக்கில் தூற்றுகிறார். அதில் நான் பதில் கொடுக்கும் அளவுக்கு அன்று போல் இன்றும் ஆதாரங்களுடன்

எந்தவிதமான குற்றச்சாட்டும் இல்லை. ஆகாயத்தில் சிலம்பம் பண்ணுகிறார். இவரது இந்த சுற்றறிக்கை நாய் தான் கக்கினதை மீண்டும் மீண்டும் திண்பது போன்று உள்ளது. ஆம் தான் கக்கினதையே மீண்டும் மீண்டும் தின்றுகொண்டிருக்கிறார். நாய் சந்திரனை பார்த்து குரைத்தால் அதினால் யாருக்கு நஷ்டம்? ஆதலால் நான் இவரது இந்த சுற்றறிக்கைக்கு பதில் கொடுத்து கர்த்தர் எனக்கு தமது கிருபையினால் கொடுத்த நேரத்தையும், பணத்தையும் விரயமாக்கவிரும்பவில்லை.

117. இதோ பாருங்கள், காலேப் யோசுவா இந்த இந்த தவறான காரியங்களை அந்தரங்கத்தில் அல்லது வெளிப்படையாக செய்தார். இதோ அதற்குரிய ஆதாரங்கள் என என் மீது குற்றம்சாட்டி அதை நிருபிக்க முன் வரவேண்டும். அடுத்து இதோ இவரது கள்ள உபதேசங்கள். இவரது உபதேசங்கள் குறித்து வேதவாக்கியங்கள், இக்காலத்துக்குரிய செய்தி இன்ன இன்ன விதமாக, அவர் உபதேசிப்பது தவறு என நிருபிக்கிறது என எழுதி அதற்கு ஒரு அறிக்கை வெளியிட்டால் அது வரவேற்கத்தக்கதாக இருக்கும். இவரும் ஒரு உண்மையான ஊழியக்காரன் என மக்களால் மதிக்கப்படுவார். இதை விட்டுவிட்டு மேடைக்கு வருகிறாயா? ஹோட்டலுக்கு வருகிறாயா? அல்லது கொல்லபுறத்துக்கு வருகிறாயா? இப்படி ஆகாயத்தில் சிலம்பம் அடிப்பவன் யார்? அவன் பிசாசு என்று ஆவிக்குரியவர்களுக்கு நன்றாக தெரியும். வேதவாக்கியங்களின்படி தர்க்கங்களையும், வாக்குவாதங்களையும் பற்றி நோய்கொண்டவன் யார்? அவன் பிசாசு தவிர வேறு யாரும் இல்லை.

118. இவரை குறித்து சகோ.ஜான் ஐசக், சகோ.இராஜேந்திரன், சகோ.குருவண்ணன் போன்றவர்களுக்கு அதிகம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. தான் யார் என்பதை அன்று முதல் இன்று வரை இந்த துன்மார்க்கன் தன் கிரியைகளில் வெளிப்படுத்தியே வருகிறான். இவனை அடையாளம் கண்டுக்கொள்கிறவர்கள் பாக்கியவான்கள். இவரது இன்றைய சகாக்கள் யாவரும் இவரது பழைய கதைகளை அறியாத புதுசுகள் தான். ஆதலால் அவர்களையும் குறைகூற எதுவும் இல்லை. தந்திரமான தனது வார்த்தைகளினால் அவர்களை தனக்கு ஆதாயமாக வசப்படுத்திக்கொண்டார். அதுதான் காரியம். ஆக இவரது இந்த நான்கு பக்க சுற்றறிக்கை நாய் தான் கக்கினதை தின்ன திரும்பியது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழி அவருக்கு சம்பவித்தது. அது தான் உண்மை.

119. இந்த இருமாப்புக்காரன் பாஸ்டர் பி.எம்.ஏ. சாமி, பாஸ்டர் ஐசக் வசந்தகுமார், வலசரவாக்கம் பாஸ்டர். சாமுவேல், பாஸ்டர் ஐசக் அருமைநாயகம், இன்னும் சகோ. யோவேல் மூடி பரமானந்தம், சகோ. மோசஸ் தயானந்தம் போன்றவர்களிடம் சென்று காது குத்தமுடியுமா? நேற்று சத்தியத்தை அறியும் அறிவுக்குள் வந்த பாஸ்டர் குருவண்ணனுக்கு இவரை பற்றி என்ன தெரியும்? இந்த சகோதரர் தஞ்சாவூர் - ஆத்துமநேசர் ஸ்தாபனத்திலிருக்கும்போது, கோவையில் இவரது சபைக்கு சென்று நான் அங்கு செய்தி கொடுத்திருக்கிறேன். அவர் வீட்டிற்கு சென்று அவரோடு போஜனம் பண்ணியிருக்கிறேன். அந்நாட்களில் ஆத்துமநேசர் சபையில் இவர் மூப்பராக இருந்தார். இவர், இந்த பிசாசின் கண்ணியில் விழுந்தது ஆச்சரியமாக இருக்கிறது. அடுத்து பாஸ்டர் ராஜேந்திரனுக்கு இவரை பற்றி என்ன தெரியும்? இந்த எத்தனை குறித்து ஓரளவு அறிந்திருந்த சகோ.சார்லஸ் ராஜ்குமாரும், சகோ.ஆல்பர்ட் பிரேம்குமாரும் இவரிடம் ஏமாந்து விட்டார்கள் என்றால், ஒன்றுமே அறியாத சகோ. ஜான் ஐசக், சகோ. ராஜேந்திரன், சகோ.குருவண்ணன் குறித்து கூறவா வேண்டும்? இவர்கள் யாவரும் இந்த நயவஞ்சகனை அடையாளம் கண்டுகொள்ளவேண்டிய காலக்கட்டத்துக்குள்தான் இருக்கிறார்கள் என நினைக்கிறேன். ஊட்டியில் தன் கதையை அறியாத ஊழியர்களை வலைபோட்டு தேடிக்கொண்டிருக்கிறார். அங்கு இவரை அறிந்தவர்கள் அதிகம் இருப்பதால் இவர் கண்ணியில் அதி சீக்கிரமாக யாரும் விழமாட்டார்கள். நெல்லை, குமரி மாவட்டங்களில் சென்று வலைவீசினார். நாகர்கோவிலில் கூட்ட ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கிறது என்றார். இடத்தை சென்று பார்வையிட்டார். கேட்ட வாடகை கொடுப்பதாக கூறினார். அந்த பந்தா பேச்சோடு அனைத்து காரியங்களும் முடிந்தது. ஏனென்றால் அவர் கண்ணியில் யாரும் சிக்கவில்லை. அங்கு இவரது ஆழத்தை அறிந்தவர்கள் பலர் இருப்பதால் இவரது காரியங்கள் கைகூடி வரவில்லை. இவரை சபையில் ஏற்றுக்கொள்ளவும் மறுத்துவிட்டனர்.

120. இந்நாட்களில் இவர் பலரை குறித்து முகஸ்துதி செய்து எழுதுபவன் நோக்கம் என்ன? உதாரணமாக சகோ.யோவேல் மூடி பரமானந்தத்தை குறித்து முகஸ்துதி செய்வதென்ன? வேதம் இது குறித்து என்ன கூறுகிறது? பிறனை முகஸ்துதி செய்கிறவன்; அவன் கால்களுக்கு வலையை விரிக்கிறான். நீதி.29:5 ஆக அநேகருடைய கால்களுக்கு வலையை விரித்ததால் அதில் அகப்பட்ட மீன்கள் மூன்று தான். அவைகளும் இவர் கைகளிலிருந்து நழுவுகிற நிலையில் தான் இருக்கிறது.

121. இப்பொழுது கவனியுங்கள் அந்த குடிகாரன் தனது மதுபான வெறியில் பிதற்றிக்கொண்டும், தூற்றிக்கொண்டும் ரோட்டில் நடனமாடி செல்வதை பொதுமக்கள் கண்டும் காணாது, கேட்டும் செவிகொடுக்காது தங்கள் பணி சென்றுகொண்டிருப்பார்கள். அதுபோன்று இந்த வெறியனது அவதூறான சுற்றறிக்கைகளுக்கு எந்த முக்கியத்துவம் கொடுக்காது நான் கடந்து செல்கிறேன். ஆவிக்குரியவர்களும் அதை புறக்கணித்து தங்கள் வழியில் சென்றுகொண்டிருப்பார்கள். ஆனால் அந்த வெறியன் தன் துன்மார்க்கத்திற்கேதுவான மதுபான வெறியினால் தூற்றிக்கொண்டு திரியும் வார்த்தைகளை கீழ்மக்கள் நின்று, கேட்டு, ரசித்து மகிழுவார்கள். அவ்வாறு இந்த பேலியாள் மகனுடைய சுற்றறிக்கையில் மகிழுகிறவர்களும் உண்டு. அவர்கள் மகிழட்டும். நான் இங்கு ஆவிக்குரிய மேன்மக்கள், கீழ்மக்கள் குறித்து எழுதுகிறேன். இதை யாரும் தவறாக புரிந்து கொள்ளவேண்டாம். ஏனென்றால் இந்த வன்கண்ணன் இதை கொண்டு ஐயய்யோ, என் ஜாதியை தூற்றுகிறார் என கூறி என்னை வம்புக்கு இழுப்பார்.

122. முடிவாக கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே, ***இது சிந்திக்கும் காலம், செயல்படும் நேரம்.*** கிறிஸ்து இயேசுவுக்குள்ளான என்னுடைய அன்பு உங்களெல்லாரோடுங்கூட அவருடைய வருகை மட்டும் இருப்பதாக. ஆமென்.

பிப்ரவரி - மார்ச், 2006

கிறிஸ்துவின் அன்பில்
சகோ. காலேப் யோசுவா